# சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி

முதல் பதிப்பு © 2015

மத்தியஸ்தம், மோதல் தடுப்பு மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பவற்றில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களையும், பால்நிலை கண்ணோட்டங்களையும் தாக்கமான விதத்தில் உள்ளடக்கிக் கொள்வதற்கான நடைமுறைச் சாத்தியமான படிமுறைகளை வழங்கும் ஒரு திறந்த மூலாதாரம்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325 நிகழ்ச்சிநிரலை சொல்லிலும், செயலிலும் யதார்த்தமாக்குவதற்கான கைநூல்.

சர்வதேச சிவில் சமூக செயல் வலையமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

இந்த நூலின் பிரதி தொடர்பாக ஆக்கபூர்வமான மீளாய்வுகளை வழங்கிய பின்வருபவர்களுக்கு எமது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்: தூதுவர் கரே ஆஸ், திரு. டேனியல் டி டொரஸ், கலாநிதி சிலா எல்வர்த்தி, திருமதி ரச்சல் கஸர், திருமதி மெலின்டா ஹோம்ஸ், செனட்டர் மொபீனா ஜாபர், கலாநிதி கத்லீன் கியோநாஸ்ட், திரு. யூசுப் மஹ்மூத், கலாநிதி ஜொய்சி நியு, பேராசிரியர் ஜோன் பக்கர், திருமதி அன்டோனியா பொட்டர் - பிரன்டிஸ், கலாநிதி கே ரொஸம்பலம் குமார், திருமதி ஜொலின் ஷுமேக்கர், திருமதி மரீடா சோஹேம் ரென்ஸ்விக், தூதுவர் டொனால்ட் ஸ்டீன்பேர்க், திருமதி துய்ஜா டல்விட் மற்றும் திரு. கலும் வட்ஸன்.

அது தவிர, நூலாக்கத்திற்கு ஆதரவு வழங்கி, வடிவமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கான உள்ளீடுகளை பெற்றுத் தந்ததுடன், கலந்தாராய்வுகளிலும் பங்கேற்ற பின்வருவோருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்: திருமதி ரீனா அமீரி, கலாநிதி வேர்ஜீனியா பொவீயர், திருமதி கேட் புச்சனன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி மெவிக் கெப்ரேரா பலேசா, திரு ரொபர்ட் டேன், தூதுவர் டெவொல்டி கெப்ரிமஸ்கல் ரெட்டா, திருமதி டேனியல் கோல்ட்பேர்க், திருமதி அமல் கொரானி, திரு ஸ்டீபன் ஜக்ஸன், திருமதி லோன் ஜெஸன், திரு சைமன் மேசன், திருமதி சகுந்தலா கதிர்காமர், திருமதி கெரின் ரியான், திருமதி எலிசபத் செபர், திருமதி டெவி சுரலகா, திருமதி டேல் செலிமன், திருமதி கினா டொரீ, திருமதி நஹ்லா வல்ஜி மற்றும் தெரேஸா வைட்பீல்ட்.

“சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி” என்ற இந்த நூலை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்த கார்டர் நிலையம் மற்றும் 1325 செயல்பாட்டு கூட்டணிக்கும் (உகண்டா), அதே போல தொடர்ந்து எமக்கு ஆதரவளித்து வரும் பின்வரும் நிறுவனங்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்: Cordaid, அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான நோர்வேஜிய முகவரகம் (Norad), நோர்வே வெளி விவகார அமைச்சு, சுவிஸ் சமஷ்டி வெளி விவகார அமைச்சு மற்றும் UN Women அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த சமாதான முன்முயற்சி

சிறந்த சமாதான முன்முயற்சி 2014 ஆம் ஆண்டில் சர்வதேச சிவில் சமூக செயல் வலையமைப்பினால் துவக்கி வைக்கப்பட்டது. சமாதானத்தை உருவாக்குதல் மற்றும் மத்தியஸ்த செயல்முறைகள் என்பவற்றில் சமாதானத்தை கட்டியெழுப்புவதில் ஈடுபட்டு வரும் பெண்களை உள்ளடக்கிக் கொள்வதற்கான நடைமுறை வழிகாட்டுதல்களை அபிவிருத்தி செய்வதற்கென இது உருவாக்கப்பட்டது. இக்கருத்திட்டம் ஆராய்ச்சி, கூட்டங்களை நடத்துதல் மற்றும் பன்முகப்பட்ட கலந்தாராய்வுகள் என்பவற்றை மேற்கொண்டு வருகின்றது. இவற்றுக்கு ஊடாக, பெண்களை உள்ளடக்கிக் கொள்ள வேண்டியது ஏன் என்ற கேள்விக்கும் அப்பால் சென்று, அச்செயற்பாடு எவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்ற விடயத்தின் மீது அது கவனம் செலுத்துகின்றது. அதாவது, பெண்களை உள்ளடக்கிக் கொள்ளும் விடயத்தில் தற்போது காணப்படும் இடையூறுகளை அது இனங்காண்பதுடன், அந்த இடையூறுகளை தாண்டிச் செல்வதற்கான தாக்கமான உத்திகளையும் முன்வைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த சமாதான முன்முயற்சி தொடர்பான மேலும் தகவல்களையும், சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி சம்பந்தப்பட்ட வளங்களையும் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் ணையதளத்தை அணுகவும்: www.betterpeacetool.org சமூக வலைத்தளத்தில் பார்க்கவும்: #betterpeace.

## கருத்திட்ட குழு

சர்வதேச சிவில் சமூக செயல் வலயமைப்பின் இணை ஸ்தாபகரும், நிறைவேற்று பணிப்பாளருமாகிய சனம் நராகி அன்டர்லினி இக்கருத்திட்டத்திற்கு தலைமை தாங்கினார். கருத்திட்ட முகாமைத்துவம், ஆராய்ச்சி மற்றும் பிரதியாக்க உதவி என்பன கருத்திட்ட நிகழ்ச்சிதிட்ட உத்தியோகத்தரான ஸ்டீபனீ பிரிட்மன், முன்னாள் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தரான மெடலின் கோச் மற்றும் மூத்த ஆய்வாளர் அன்ட்ரீ சுலய்பான் ஆகியோரினால் வழங்கப்பட்டது. ஊடக வடிவமைப்பு – ரீகன் ஸ்மித், தலைவர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர் DHM Media Group.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


நிறைவேற்று சாராம்சம்

பாகம் I

21 ஆம் நூற்றாண்டின் ராஜதந்திரக் கலை:

- உருவாகி வரும் ராஜதந்திரக் கலை
- பெண்கள் தொடர்பாக மாறி வரும் இலக்குகள்
- சமாதான செயல்முறைகளில் "பெண்களை உள்ளடக்கிக் கொள்வது எப்படி?" என்ற கேள்வியை சமாளித்தல்

பாகம் II

சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி:
அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் சமாதான செயன்முறைகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் என்பவற்றுக்கான வழிகாட்டுதல்

பகுதி 1

பொதுவான இடையூறுகள் மற்றும் புத்தாக்க இயல்பிலான தீர்வுகள்:
அனைவரையும் உள்ளடக்கிய விதத்தில் சமாதானத்தை உருவாக்குவது தொடர்பான புதிய முன்னுதாரணங்கள்

- சமூக நிலைமாற்றம் என்ற முறையில் சமாதான செயன்முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆறு பொதுவான இடையூறுகளும் அவற்றை வெற்றிக் கொள்ளும் விதமும்

1. "நாங்கள் அனைவரையும் பிரதிநிதித்துவம் செய்கின்றோம்."
2. "மத்தியஸ்தரினால் எல்லாவற்றையும் செய்ய முடியாது."
3. "என்னவாக இருந்தாலும் யார் இந்தப் பெண்கள்?"
4. "இது பெண்கள் சம்பந்தப்பட்ட ஒரு விடயமல்ல."
5. "நான் எனது சொந்த தகுதிகளின் அடிப்படையில் இங்கு இருக்கின்றேன்."
6. "பெண்களை புறமொதுக்குவது கலாசார ரீதியான ஒரு விடயமாகும்."

## பகுதி 2

சிறந்த சமாதானத்திற்கான நான்கு வழிகாட்டுதல் துறைகள்: அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் குறிக்கோளை சாதித்துக் கொள்வதற்கான முனைப்பான படிமுறைகள்

- மத்தியஸ்த செயற்பாட்டின் பின்புலத்தை புரிந்து கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெட்டிகள்

பெட்டி 1 - சேர்க்கப்பட்ட பெறுமதி:
சமாதான பேச்சுவார்த்தைகளில் சிவில் சமூகம்

பெட்டி 2 - பெண்கள் என்ன சொல்கின்றார்கள்?
பங்கேற்பு மற்றும் பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325

பெட்டி 3 - மாதிரி அளவுகோல்:
மத்தியஸ்த செயற்பாட்டில் உள்ளடக்கிக்
கொள்வதற்கென சிவில்
சமூக உறுப்பினர்களை அடையாளம்
காணுதல

பெட்டி 4 - சிறந்த நடைமுறைகள்
சிவில் சமூக பிரதிநிதிகளை தெரிவு
செய்வதற்கான சிறந்த நடைமுறைகள

# பின்னிணைப்புக்கள்

## பின்னிணைப்பு I

**பெண்கள் சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அனைவரையும் உள்ளடக்கிக் கொள்வதற்கு அரசியல் ஆதரவை வழங்குதல்
- தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்
- பொது வசதிகள் மற்றும் நிதி ஆதரவு என்பவற்றை வழங்குதல்

முடிவுரை

மாறிவரும் நடைமுறைகள் மற்றும் பரிமாணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று சாராம்சம்

தற்போதைய போர்களில் சம்பந்தப்படும் தரப்புக்கள் பெரும் எண்ணிக்கையில் காணப்படுவதுடன், அவை மிகவும் சிக்கலானவையாகவும் இருந்து வருகின்றன. இந்த நிலையில் அத்தகைய போர்களை தடுப்பதற்கும், தீர்த்து வைப்பதற்குமென புதிய அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. சமாதானத்தை உருவாக்குவதில் அரசு மற்றும் அரசு சாராத ஆயுத செயற்பாட்டாளர்கள் ஆகிய தரப்புக்களை உள்ளடக்கிக் கொள்வது அவசியமாகும். ஆனால், நிலைபேறான சமாதானம் குறிக்கோளாக இருந்து வருமிடத்து அது மட்டும் இதற்கு போதியதாக இருந்து வர மாட்டாது.

மிகவும் வன்முறையுடன் கூடிய சூழ்நிலைகளிலும் கூட சிவிலியன்களில் ஒரு சிறு குழுவினர் - பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்கள் - தமது விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகள் என்பவற்றின் அடிப்படையில் தமது நாட்டில் சமாதானத்திற்காக துணிச்சலாக குரல் கொடுக்கக் கூடியவர்களாகவும், போராடக் கூடியவர்களாகவும் இருந்து வருகின்றார்கள். இதிலிருந்து தப்பி வெளியேறிச் செல்வதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உத்தி அவர்களிடம் இருந்து வரவில்லை; ஆனால், தமது சமூகங்கள் தொடர்பாக சமூக நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றில் ஆழமாக வேரூன்றியிருக்கும் ஒரு தூர நோக்கினை அவர்கள் கொண்டுள்ளார்கள். மேலும், போர் வலயங்களில் வாழ்க்கையின் நடைமுறை அனுபவங்களை வழங்கக் கூடிய ஒரு முக்கியமான மூலாதாரமாகவும், கள நிலைமைகள் குறித்த அறிவை வைத்திருக்கும் ஒரு மூலாதாரமாகவும் அப்பெண்கள் இருந்து வருகின்றார்கள். எழுச்சி கண்டு வரும் பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்கள் நிலைமை மேலும் மோசமடைவதை தடுத்து நிறுத்துவதற்கான வினைத்திறன் மிக்க வழிமுறைகள் மற்றும் சமாதானம் என்பன குறித்த அறிவையும், அனுபவத்தையும் அவர்கள் கொண்டுள்ளார்கள். அவர்கள் வழங்கியிருக்கும் பங்களிப்புக்களையும், சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்பாட்டில் அவர்கள் வகிக்கக் கூடிய மிகவும் நிர்ணயகரமான வகி பாத்திரத்தையும் ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

சமாதான பேச்சுவார்த்தைகள் என்பவை பாதுகாப்பு மற்றும் அரசியல் செயன்முறைகள் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாக இருந்து வருகின்றது என்ற குறுகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டத்திலிருந்து, அவை அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் சமூகச் செயன்முறையாக இருந்து வர வேண்டுமென்ற கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்ளும் விடயத்தில் ஒரு மாற்றம் இடம்பெற வேண்டும். அதற்கு நடைமுறைகளிலும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை இருந்து வருகின்றது.

சமாதானத்திற்கான ஓர் சிறந்த கருவி சமாதானத்தை ஏற்படுத்தும் செயன்முறையின் பால்நிலை கண்ணேட்டங்களையும், சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களையும் வினைத்திறன் மிக்க விதத்தில் உள்ளடக்கிக் கொள்வதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிகாட்டுதல் ஒன்றை வழங்குவதன் மூலம் "எவ்வாறு" என்ற கேள்வியை கவனத்தில் எடுக்கின்றது. பாகம் I நவீன கால கட்டத்தில் சமாதானத்தை உருவாக்கும் செயற்பாட்டின் வரலாறு மற்றும் அதன் பரிணாம வளர்ச்சி என்பவற்றை குறிப்பிடுகின்றது. பாகம் II இரு பகுதிகளாக சமாதானத்திற்கான சிறந்த கருவியை முன்வைக்கின்றது: பகுதி 1 சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை உள்ளடக்கிக் கொள்வதில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் ஆறு பொதுவான இடையூறுகளை கவனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கின்றது. பகுதி 2 எண்ணக் கரு ரீதியான மாற்றங்கள், அரசியல், தொழில்நுட்ப மற்றும் ஏற்பாடுகள்/ நிதி ஆதரவு என்பன தொடர்பான விடயங்கள் மீது கவனம் செலுத்தி, அனைத்துமடங்கிய நான்கு – அம்சம் சட்டகமொன்றை முன்வைக்கின்றது.

எண்ணக் கரு மற்றும் பகுப்பாய்வு: மத்தியஸ்தம் செய்யும் பின்புலத்தை புரிந்து கொள்ளல

அரசியல் ஆதரவு: பெண்களை உள்ளடக்கிக் கொள்வதற்கு அழுத்தம் பிரயோகித்தல்

ஆயத்தப்படுத்துதல்/பேச்சுவார்த்தைக்கு முன்னைய கட்டம், சமாதான பேச்சுவார்த்தைகளின் போது மற்றும் அமுலாக்கத்தின் போது

தொழில்நுட்ப ஆதரவு: பால்நிலை கூருணர்வு கொண்ட நியுணத்துவத்தை வழங்குதல்

ஏற்பாடுகள் மற்றும் நிதி ஆதரவு: உரிய நேரத்தில் நிதிப்படுத்தல் மற்றும் உதவியை வழங்குதல்

## "சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள்" யார்?

"சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள்" என்ற பதம் அஹிம்சைக்கென தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தனி நபர்களையும், பெண்களின் தலைமையிலான அமைப்புக்களையும் குறிக்கின்றது; அவர்கள் சமாதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவானவர்களாக இருந்து வருவதுடன், மனித உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகள் என்பவற்றுக்கு ஆதரவளிக்கின்றனர். ஒரு சிலர் நீதிக்காக குரல் எழுப்புவதுடன், ஏனையவர்கள் மோதல்களின் தாக்கங்களை கவனத்தில் எடுக்கும் விதத்தில் பணிகளை முன்னெடுக்கின்றனர்; மற்றும் / அல்லது பால்நிலை கண்ணோட்டத்துடன் கூடிய விதத்தில் சமாதானத்தை மேம்படுத்தி வருகின்றனர். பொதுவாக அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சமாதான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென முதலில் குரலெழுப்புபவர்களாக அவர்களே இருந்து வருகின்றார்கள். ஆனால், தொடர்ந்தும் அவர்கள் புறமொதுக்கப்பட்டவர்களாகவே உள்ளார்கள் (பார்க்கவும்: சிவில் சமூக அமைப்புக்களை இனங்காண்பதற்கான மாதிரி அளவுகோல் - பெட்டி 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் 1

## 21 ஆம் நூற்றாண்டின் ராஜதந்திரக் கலை: அதிகார பகிர்விலிருந்து பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வது வரை

### சனம் நராகி அன்டர்லினி

வரலாறு நெடுகிலும் போர் மற்றும் சமாதானம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் பெருமளவுக்கு மேட்டுக்குடி அரசியல் மற்றும் இராணுவ செயற்பாட்டாளர்களின் பிரத்தியேகமான செயன்முறைகளாக இருந்து வந்துள்ளன. எவ்வாறிருப்பினும், கடந்த சில தசாப்தங்கள் போர் மற்றும் சமாதானம் என்பவற்றில் கணிசமான அளவிலான மாற்றங்களை எடுத்து வந்துள்ளன. ஒட்டுமொத்த போர்களின் எண்ணிக்கை – குறிப்பாக, அரசுகளுக்கிடையிலான போர்களின் எண்ணிக்கை – கடந்த தசாப்தத்தின் போது வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. அதே வேளையில், இடம்பெற்று வரும் மோதல்கள் பெருமளவுக்கு சிக்கலானவையாக இருந்து வருவதனை நாங்கள் பார்க்கின்றோம். கெடுபிடி யுத்தத்தின் முடிவு, அரசுகளுக்கிடையிலான போர்கள் மற்றும் பெருமளவுக்கு தேச எல்லைகளை கடந்த மோதல் என்பவற்றுக்கு வழிகோலியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டாளர்கள் எண்ணிக்கை தீவிரமாக பெருக்கமடைந்து வந்ததுடன் இணைந்த விதத்தில் 'வன்முறை ஜனநாயகமாக்கப்பட்டுள்ளது அல்லது பன்முகப்படுத்தப்பட்டுள்ளது'. இந்தச் செயற்பாட்டாளர்கள் சர்வதேச மற்றும் தேசிய பாதுகாப்புப் படைகள், ஒட்டுப் படைகளுடன் கூடிய பிராந்திய வல்லரசுகள், அரசு சாரா உள்நாட்டு ஆயுதக் குழுக்கள், ஒரு நாட்டில் ஆட்சேர்ப்பு செய்து பிறிதொரு நாட்டில் பணியில் அமர்த்தும் பல்தேசிய ஆயுதக் குழுக்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இவற்றில் பல குழுக்கள் அடிமட்டத்தைச் சேர்ந்த சமூகங்களுடன் எத்தகைய தொடர்புகளும் இல்லாத விதத்தில், அவர்களுக்கு எவ்விதத்திலும் பொறுப்புக் கூறாமல் தமது சொந்த நோக்கு மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பவற்றை முன்னெடுத்துச் செல்கின்றன. ஒரு சில குழுக்கள் அரைக் குற்ற இயல்பை கொண்ட குழுக்களாக இருந்து வருவதுடன், அவை போதைப் பொருள் வர்த்தகம் போன்றவற்றில் ஈடுபட்டு தமக்குரிய நிதிகளை தேடிக் கொள்கின்றனர். இவர்களின் வியாபார நடவடிக்கைகள் ஆயுதங்கள், மனிதக் கடத்தல் அல்லது ஏனைய வருமான மிக்க மூலங்கள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன; ஏனையவர்கள் பாதுகாப்பு அமைப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனங்களை பயன்படுத்தி செயற்படும் உள்ளூர் ஆயுதக் குழுக்கள், குண்டர்கள் மற்றும் அரசியல் தீவிரவாதிகள் ஆவர். அவர்கள் பயமுறுத்தி பணம் பறித்தல், சேவைகளை வழங்குதல் அல்லது பாதுகாப்பு வழங்குதல் என்பவற்றுக்கூடாக தமது வாடிக்கையாளர்களை கட்டமைத்துக் கொள்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் தொடர்பான திட்டவட்டமான பிற்போக்கு இயல்பிலான கருத்தியல்களை கொண்டுள்ளனர். பெண்கள், கல்வி மற்றும் பொது வாழ்க்கை என்பவற்றை அணுகுவதனை அவர்கள் தடுத்து வருவதுடன், அத்தகைய தடைகளை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனைகளையும் வழங்கி வருகின்றார்கள். மேலும், சட்ட ரீதியான வரையறைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றுக்கூடாக அவர்கள் மறைமுகமான ஒரு அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுகின்றார்கள். கிளர்ச்சிக் குழுக்கள், தீவிரவாத இயக்கங்கள் மற்றும் திட்டமிட்டு குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்கள் என்பவற்றுக்கிடையிலான பிணைப்புக்கள் பெருமளவுக்கு பல்தேசிய இயல்புகளைக் கொண்டவையாக இருந்து வருகின்றன. குறிப்பாக, இயற்கை வளங்களை பொறுத்தவரையில் தனியார் துறையும் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வருகின்றது.

## ஜனநாயகமயமாக்கல் மற்றும் சமாதான உருவாக்க செயன்முறையின் பரிணாம வளர்ச்சி

இந்த மாற்றங்களுக்கு எதிர்வினையாற்றும் விதத்தில் அரசு சாராத நிராயுதபாணிகளான செயற்பாட்டாளர்கள் அல்லது சிவில் சமூகத்தினர் சமூக மட்டத்திலும், தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் எழுச்சியடைந்து இப்பொழுது பிரபல்யமடைந்துள்ளனர். அதாவது, வினைத்திறன் மிக்க அரச சேவைகள் இல்லாத நிலை அல்லது அடக்குமுறையுடன் கூடிய அரசுகளின் தோற்றம் என்பவற்றின் பின்னணியில் இந்த எழுச்சி ஏற்பட்டிருக்கின்றது. உலகளாவிய வலையமைப்புக்களிலிருந்து பிராந்திய வலையமைப்புக்கள் வரையில் எழுச்சி கண்டு வரும் வெகுஜன இயக்கங்களில் சாதாரண குடிமக்கள் வன்முறை மற்றும் அடக்குமுறை என்பவற்றிக்கு எதிராக ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து வருகின்றார்கள் - பாரதூரமான ஆபத்துக்களுக்கு எதிரில் அவர்கள் இவ்விதம் தமது நிலைப்பாட்டில் நிற்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 2500 வருடங்களாக இராணுவ மற்றும் அரசியல் மேட்டுக் குடியினர் - பெரும்பாலும் ஆண்கள் - போர் மற்றும் சமாதானம் என்பவற்றை தீர்மானித்து வந்துள்ளார்கள்; ஆனால், போரின் இயல்பு மாற்றமடைந்து வருவதுடன் இணைந்த விதத்தில் சமாதானத்தை உருவாக்கும் செயன்முறையையும் நாங்கள் மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

கடந்த இரண்டு தசாப்த காலத்தின் போது மோதல் தீர்வு மற்றும் நிலைமாற்றம் என்பவற்றை கவனத்தில் எடுக்கும் துறை கல்விப் புல அடிப்படையிலும், நடைமுறையிலும் அபிவிருத்தியடைந்து வந்துள்ளது. அரசாங்க அமைப்புக்கள் - குறிப்பாக, அரசு சாரா அமைப்புக்கள் - சமாதானத்தை கட்டியெழுப்புதல், மத்தியஸ்தம் மற்றும் மோதல் தீர்வு என்பவற்றில் நிபுணத்துவத்தை உருவாக்கிக் கொண்டுள்ளன. அவை வழித்தடம் I மட்டத்தைச் சேர்ந்த ராஜதந்திர மட்டத்திலும், அதை போல முறைசாராத (ஆனால், அதிகளவில் முக்கியத்துவம் வாய்ந்த) வழித்தடம் II மட்டத்திலும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட முன்முயற்சிகளில் இப்பொழுது செயற்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல மத்தியஸ்தம் மற்றும் மோதல் தீர்வு என்பவற்றில் ஈடுபட்டு வரும் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கையில் ஒரு அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதுடன், அவர்கள் பன்முகத் தன்மையை கொண்டவர்களாகவும் இருந்து வருகின்றார்கள். கெடுபிடி யுத்தம் இடம்பெற்று வந்த காலப் பிரிவின் போது மோதலில் ஈடுபட்டிருந்த தரப்பினருக்கு பின்னணியிலிருந்து உந்து விசையை வழங்கி வந்த முக்கிய அரசுகளாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் என்பன இருந்து வந்ததுடன், சமாதானத்தை மேம்படுத்துவதற்கான வல்லமையையும் அவை கொண்டிருந்தன. ஆனால், இன்று மத்தியஸ்த செயற்பாட்டில் ஈடுபடும் விடயத்திலும், சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணை வழங்குவதிலும், தமது முயற்சிகளுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் விடயத்திலும், அரசுகளுக்கிடையிலும் பிராந்திய அமைப்புக்களுக்கிடையிலும், ஒரு போட்டி இடம்பெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது. பாரிய கம்பெனிகள் தொடக்கம் சமய அமைப்புக்கள் வரையிலும் அதே போல சர்வதேச அரசு சாரா அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் ஆகிய பல்வேறு தரப்பினர் மத்தியஸ்தம் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல் தீர்வு ஆகிய துறைகளில், முனைப்பாக ஈடுபட்டு வருகின்றனர்.

தேசிய ரீதியிலும் சுயாதீனமான அஹிம்சை வழியைப் பின்பற்றும் சமாதான அமைப்புகள் எழுச்சியடைந்துள்ளன. பல தசாப்த கால ஆயுதம் தாங்கிய விடுதலை போராட்டக் குழுக்களின் செயற்பாட்டுக்கு பின்னர், இலத்தீன் அமெரிக்காவில் இன்று நீதி மற்றும் உரிமைகள் என்பவற்றுக்கு குரல் கொடுக்கும் விடயத்தில் நிராயுதபாணிகளான சமூக அமைப்புக்கள் முன்னணியில் இருந்து வருகின்றன. ஆபிரிக்கா நெடுகிலும் சமாதானம் மற்றும் மோதல் தீர்வு வலையமைப்புகள் வன்முறையை தணிப்பதிலும், தடுப்பதிலும் முதன்மையான ஒரு பாத்திரத்தை வகித்து வருகின்றன. மோதல் நிலைமாற்றம் என்ற எண்ணக் கரு – வன்முறையில் ஈடுபடாமல் மோதல்களை சமாளிக்கும் ஆற்றல் - பல்வேறு வழிகளில் இப்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தென் ஆபிரிக்கா மற்றும் கென்யா ஆகிய நாடுகளில் உள்ளூர் சமூகங்களை சேர்ந்த பன்முகப்பட்ட பிரதிநிதிகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான கமிட்டிகள் பதற்ற நிலைமைகள் மற்றும் வன்முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை தணிக்கும் விடயத்தில் பயிற்சியை பெற்றுக் கொண்டுள்ளன. லைபீரியாவில் Palava Huts என அமைக்கப்படும் முறை, வீட்டு வன்முறைகளை உள்ளடக்கிய விதத்தில் உள்ளூர் தகராறுகளை தீர்த்து வைப்பதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கி வருகின்றது. பிராந்திய அரசு சாரா அமைப்பான Femmes Africa Solidarite என்ற அரசு சாரா அமைப்பு தேர்தல் சம்பந்தப்பட்ட வன்முறைகளை கட்டுப்ப டுத்துவதில் முக்கியமாக பங்காற்றியுள்ளது. சிரியாவில் வன்முறைக்கு மத்தியிலும் கூட, தளிர் விட்டு வளர்ந்து வரும் சமாதான அமைப்புக்கள் உள்ளூர் மத்தியஸ்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதுடன், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்குகின்றன. சர்வதேச ரீதியில் பரப்புரை செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆற்றல்களையும் அவை வளர்த்துக கொண்டுள்ளன.

சிவில் சமூக அமைப்புக்கள் வளப் பற்றாக்குறையை கொண்டிருந்த போதிலும், அதிகாரம் குறித்த பாரம்பரிய எண்ணக்கருக்களுடன் தொடர்புபட்ட விதத்தில் பலவீனமானவை என நோக்கப்பட்ட போதிலும் அவை இப்பொழுது மிக முக்கியமான மென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார திறன்களை பெற்று வருகின்றன. அரசாங்கங்கள் எதிர்கொண்டு வரும் இடையூறுகள் இல்லாமல் அந்த அமைப்புக்களினால் பரந்த வீச்சிலான செயற்பாட்டாளர்களை அணுகி, அவர்களுடன் இணையும் வாய்ப்பு காணப்படுகின்றது. இந்த சிவில் சமூக அமைப்புக்கள் ஓரளவுக்கு புதிய தொழில்நுட்பங்களுக்கூடாகவும், சமூக வலைத்தளங்களுக்கூடாகவும் இந்தப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன. சமூகங்களுக்கிடையில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் அவை கவனம் செலுத்தி வருவதுடன், பிராந்தியத்திற்கிடையில் தகவல்களை பரிமாற்றம் செய்து, அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளன. அவை சமூகங்களுக்கிடையே நிகழும் உரையாடல்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதுடன், தீர்வு அடிப்படையிலான உத்திகளுக்கும் ஆதரவளித்து வருகின்றன. தீவிரவாத கோஷங்கள் அதிகரித்து வரும் வேளையில், அவை தனித்தன்மைக்கும் சகவாழ்வுக்குமான வெளியை பராமரித்து, தக்க வைத்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவாகி வரும் ராஜதந்திரக் கலை: புதிய யதார்த்தங்களுக்கு நடைமுறைச் சாத்தியமான எதிர்வினைகள்

இந்த யதார்த்தங்களை எதிர்கொண்டிருக்கும் நிலையில் சர்வதேச ராஜதந்திர வட்டாரங்கள் தமது நடைமுறைகளையும் நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக் கொண்டுள்ளன. ஏற்பட்டிருக்கும் மிக முக்கியமான ஒரு அபிவிருத்தி அரசு சாராத ஆயுதக் குழுக்களை அங்கீகரித்து, அவற்றுடன் நேரடியாக தொடர்புகளை கட்டி எழுப்பிக் கொள்ளும் விடயத்தில் அரசுகளும், பல்தரப்பு நிறுவனங்களும் இப்பொழுது அதிகரித்தளவில் ஆர்வம் காட்டி வருவதாகும். 1990 களின் தொடக்கத்தில் (மொஸாம்பிக்கில் RENAMO, சியாராலியோனில் RUF/SL அல்லது எல் சல்வடோரில் FMLN போன்ற) அரசு சாராத ஆயுதக் குழுக்களுடனான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது ஐக்கிய நாடுகள் அமைப்புக்கும், அதே போல பிராந்திய அரசுகளை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்களுக்கும் சவால் மிக்க ஒரு செயன்முறையாக இருந்து வந்தது. அத்தகைய நடைமுறைகள் ஐ நாவின் அடிப்படை விழுமியங்களுக்கு சவால் விடுக்க முடியுமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அச்சம் நிலவி வந்தது – ஒரு சில வட்டாரங்களில் இன்னமும் அந்த அச்சம் காணப்படுகின்றது. அதாவது, தலையிடாமை மற்றும் அரசுகளின் இறைமைக்கு மதிப்பளித்தல் என்பனவே ஐ நா வின் கோட்பாடாக இருந்து வந்தது. அத்தகைய குழுக்களுக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்கும் விடயம் தொடர்பாக விவாதங்களும், கரிசனைகளும் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன; அல்லது ‘பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது’ குறித்து கவலை தெரிவிக்கப்பட்டு வந்துள்ளது.

கடந்த தசாப்தத்தில் செயற்படுத்தப்பட்டு வந்த கண்டிப்பான பயங்கரவாத எதிர்ப்பு கொள்கைகள் மற்றும் தடைகள் என்பவற்றுக்கு மத்தியிலும் கூட, நடைமுறை யதார்த்தம் வெற்றி கண்டுள்ளது. தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் ஒரு உள்நாட்டு மோதலில் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆயுதம் தாங்கிய குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதைத் தவிர வேறு மாற்று வழிகள் அநேகமாக இருந்து வரவில்லை என்ற விடயத்தை உயர்மட்ட செயற்பாட்டாளர்கள் இப்பொழுது அங்கீகரிக்கின்றனர் - அந்த ஆயுதம் தாங்கிய குழுக்கள் அரசு சார்ந்த குழுக்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வர முடியும்; அல்லது சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ளடக்கப்படும் அரசு சாரா ஆயுதக் குழுக்களாகவும் இருக்க முடியும். ஒரு சில சந்தர்ப்பங்களில், இந்த நடவடிக்கை இடதுசாரி ஆயுதக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு வந்த சோவியத் ஆதரவு விலக்கிக் கொள்ளப்பட்டமையை அடுத்து தூண்டப்பட்டிருந்தது. உதாரணமாக, 1990 களில் இலத்தீன் அமெரிக்காவையும், ஆபிரிக்காவையும் சேர்ந்த அத்தகைய குழுக்கள் பேச்சுவார்த்தை வழியில் இறங்கியிருந்தன. அரசு சாராத குழுக்களின் - குறிப்பாக சுய நிர்ணய உரிமைக்காக போராடி வரும் குழுக்களின் - கோரிக்கைகள் மற்றும் மனக்குறைகள் என்பவற்றை சட்ட ரீதியானவையாக கருத முடியும் என்ற விதத்திலான ஒரு சட்டகத்தை வழங்குவதன் மூலம் அகிலம் தழுவிய மனித உரிமைகள் விழுமியங்களும் இதில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்துள்ளன
.

சர்வதேச சமூகம் அரசு சாராத ஆயுதக் குழுக்களுடன் தொடர்புகளை பராமரித்து வருவதற்கு மேலதிகமாக, பேச்சுவார்த்தைகளில் அனைத்துத் தரப்புக்களுக்கும் சமமான ஒரு வாய்ப்பை வழங்குவதற்கான அடிப்படை ஆதரவை வழங்குவதற்கும் முன்வந்துள்ளது. தற்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியஸ்த முயற்சிகளில் சம்பந்தப்பட்டிருக்கும் ஐ நா அமைப்பும், பல அரசாங்கங்களும் அரசு சாராத ஆயுதக் குழுக்கள் சமாதான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதனை இயலச் செய்யும் பொருட்டு அவற்றுக்கு தொழில்நுட்ப உதவி, பாதுகாப்பு உத்தரவாதங்கள், பொது ஏற்பாடுகள் என்பவற்றையும் - ஏன் நிதியுதவியையும் கூட – வழங்கி வருகின்றன. இவை பரஸ்பர நலன்களை சார்ந்த ஒரு விடயமாக இருந்து வருகின்றது. அரசுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் அமைப்பு என்ற முறையில் ஐ நாவின் மீது உள்ளார்ந்த ரீதியில் அவநம்பிக்கை கொண்டிருக்கக் கூடிய அரசு சாராத குழுக்களும் கூட, ஐ நா தூதுவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முன் வருகின்றன. ஐ நா தூதுவர்கள் அரசு சாராத எதிர்கட்சி மற்றும் ஆயுதக் குழுக்கள் என்பவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு இப்பொழுது உறுப்பு அரசுகள் அனுமதி வழங்கி வருகின்றன. இது அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் ஒரு முக்கியமான புரட்சியாகும்.

ஒரு புறத்தில் அரசாங்கங்களுக்கும், பல்தேசிய கம்பெனிகளுக்குமிடையில் அதிகரித்து வரும் கூட்டுச் செயற்பாடும், மறுபுறத்தில் சர்வதேச அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராத மத்தியஸ்த மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் அமைப்புக்களுக்குமிடையில் ஏற்பட்டு வரும் கூட்டுச் செயற்பாடும் ஒரு அண்மைக் கால மாற்றமாகும். இந்தத் துறையில் காலடியெடுத்து வைத்த முதலாவது அமைப்பு காட்டர் நிலையமாகும் (Carter Center). ஐ நா அமைப்பும், நோர்வே, பின்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஏனைய நாடுகள் என்பவற்றைச் உள்ளடக்கிய அரசாங்கங்களும், மனித நேய உரையாடலுக்கான நிலையம், Swisspeace மற்றும் நெருக்கடி முகாமைத்துவ முன்முயற்சி (CMI) போன்ற சர்வதேச அரசு சாரா அமைப்புக்களுடன் அடிக்கடி கூட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. முரண்பாடுகளை ஆக்கபூர்வமான விதத்தில் தீர்த்து வைப்பதற்கான ஆபிரிக்க நிலையம் (ACCORD), சமாதானத்திற்கான மேற்கு ஆபிரிக்க வலயமைப்பு (WANEP) மற்றும் இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த SERAPAZ அமைப்பு போன்ற பல முன்னோடி அமைப்புக்கள் அரசு சாரா குழுக்களை அணுகுவதற்கு வசதி செய்து கொடுப்பதுடன், சமூக சமாதான முன்னெடுப்புக்கான சமூகச் செயற்பாடுகளில் முன்னணி பாத்திரத்தை வகித்து வருகின்றன. சமாதானச் செயன்முறையொன்றில் மத்தியஸ்தம் செய்பவர்களும், பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் தரப்பினரும் குறிப்பிட்ட தலைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான நிபுணத்துவ அறிவையும், திட்டவட்டமான பின்புலம் குறித்த நிபுணத்துவ அறிவையும் கொண்டிருப்பது அவசியம் என்ற விடயம் ஐ நா தூதுவர்களையும் உள்ளிட்ட சர்வதேச சமூகத்துக்கு இப்பொழுது தெளிவாக தெரிய வந்துள்ளது. தெரியாமல் இடம்பெறும் தவறுகளை தவிர்த்து கொள்வதற்கென மத்தியஸ்த செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் தரப்புக்களுக்கும் இந்த நிபுணத்துவ அறிவு தேவைப்படுகின்றது. ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களிலும் (ஆயுதங்களை களைதல் அல்லது தேர்தல்கள் போன்றவை தொடர்பான யதார்த்த ரீதியற்ற காலக் கெடுக்கள் போன்ற) கள யதார்த்த நிலைமைகள் காரணமாக அவற்றின் அமுலாக்கம் இடையூறுகளை சந்தித்துள்ளது.

"சிரியாவில் ஆயுதம் தரிக்காத பெண்கள் இன்னமும் சமாதானத்தின் ஒரு சக்தியாகவும், சமாதானத்தின் சின்னமாகவும் இருந்து வருகின்றார்கள்; இந்தப் பெண்களும், சிவில் சமூகத்தைச் சேர்ந்த ஏனைய முக்கியஸ்தர்களும் உள்ளடக்கப்படாவிட்டால் எனது நாட்டில் சமாதானம் ஏற்படுமென நாங்கள் நம்பவில்லை."

- கலாநிதி ரிம் டுர்க்மானி

விண்வெளி விஞ்ஞானி மற்றும் சிரிய அரசை கட்டியெழுப்பும் அமைப்பின் இணை ஸ்தாபகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பலவீனத்தை கவனத்தில் எடுக்கும் பொருட்டு 2008 ஆம் ஆண்டின் ஐ நா வின் அரசியல் விவகாரங்கள் திணைக்களம் மத்தியஸ்த ஆதரவு அலகு (Mediation Support Unit) என்ற பெயரில் ஓர் அலகை ஸ்தாபித்தது. மத்தியஸ்த செயல்முறைகளில் ஈடுபடுவது தொடர்பான ஐ நாவின் சொந்த ஆற்றல்களை ஆழமாக்குவதற்கும், விரிவாக்குவதற்குமென இந்த அலகு ஸ்தாபிக்கப்பட்டது. சாதாரணமாக சமாதான பேச்சுவார்த்தைகளில் முக்கியமாக உள்ளடக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக வெளி நிபுணத்துவத்தை பயன்படுத்திக் கொள்வதற்கென இந்த அலகு சிரேஷ்ட மத்தியஸ்த ஆலோசகர்களின் தயார் நிலை குழுவொன்றையும் உருவாக்கியது. அதாவது, அதிகாரப் பகிர்வு, அரசியல் அமைப்புக்கள், பாதுகாப்பு மற்றும் வளங்கள் என்பன வழமையாக சமாதானப் பேச்சுவார்த்தைகளில் உள்ளடக்கப்படும் பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. மத்தியஸ்த செயல்முறை வடிவமைப்பு, பால்நிலை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் விடயம் என்பன தொடர்பான நிபுணர்கள் ஆகியோரையும் சேர்த்துக் கொள்ளும் விதத்தில் இந்தக் குழு 2011 இல் விரிவாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பரிணாம வளர்ச்சி: கள யதார்த்த நிலைமைகள் பெண்களும் உள்ளடக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை தூண்டியுள்ளன.

கடந்த இரு தசாப்த காலப் பிரிவுகளின் போது சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பான சர்வதேச தரநியமங்கள் மற்றும் சட்டங்கள் என்பவற்றில் மிக முக்கியமான முன்னேற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐ நா வின் 1325 தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை (மற்றும் இதற்கான நிகழ்ச்சிநிரலை உருவாக்கும் விதத்தில் அதனையடுத்து நிறைவேற்றப்பட்ட ஏழு தீர்மானங்கள், பார்க்கவும் பின்னிணைப்பு 1) மிக முக்கியமான அபிவிருத்திகளாக இருந்து வந்தன. போர் நிலைமைகளில் பெண்கள் எதிர்கொண்டு வரும் நேரடி வாழ்க்கை அனுபவம் மற்றும் சமாதானத்திற்கான அவர்களுடைய பணி என்பவற்றை உள்ளடக்கிய கள யதார்த்தத்தினால் தூண்டப்பட்ட விதத்தில் இந்த நிகழ்ச்சிநிரல் சமாதானத்தை உருவாக்குதல் மற்றும் பாதுகாப்பு என்பவற்றில் பெண்களின் வகி பாத்திரம் மற்றும் அவர்களுடைய பங்களிப்புக்கள் என்பவற்றை அங்கீகரிக்கின்றது. மேலும், போர் மற்றும் சமாதானம் என்பன தொடர்பான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய உரிமையையும் அது எடுத்து விளக்குகின்றது. நிவாரணங்களை வழங்குதல், மீட்சி மற்றும் போருக்குப் பிற்பட்ட முயற்சிகள் என்பவற்றின் போது ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் (அதாவது பால்நிலை கூருணர்வு) பல்வேறுபட்ட தேவைகளை கவனத்தில் எடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அது குறிப்பிடுகின்றது.

"போர் என்பது ஆண்களின் ஒரு கைத்தொழிலாக இருந்து வருமேயானால், சமாதானம் பெண்களின் ஒரு கைத்தொழிலாக இருந்து வரட்டும்."

அமல் பாஷா, மனித உரிமைகளுக்கான அரேபிய சகோதரிகள் மன்றத்தின் தலைவர் மற்றும் யெமன் தேசிய உரையாடல் மாநாட்டின் உறுப்பினர்

ஐ நா 1325 தீர்மானம் தொடர்பாக பரப்புரைகளை முன்வைத்தவர்களை பொறுத்தவரையில், பெண்களின் தலைமையிலான, சமாதான நோக்கிலான சிவில் சமூக குழுக்களின் பங்கேற்பு முதன்மையான ஒரு தூண்டுதல் காரணியாக இருந்து வந்தது. " பெண்கள் சமாதானத்தை கட்டியெழுப்புகின்றார்கள்" என்ற முதன்மையான செய்திக்கு ஊடாக இந்த அக்கறை வெளிப்படுத்திக் காட்டப்பட்டிருந்ததுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்களை தடுப்பதிலும், தீர்த்து வைப்பதிலும் பெண்கள் நிர்ணயகரமான பங்களிப்புக்களை வழங்கி வருகின்றார்கள் என்ற விடயமும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், 2000 ஆவது ஆண்டில் ஐ நா பாதுகாப்புச் சபை " சிவில் சமூகம்" என்ற பதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தது. முன்னைய தீர்மானங்களில் "உள்நாட்டு மற்றும் பிரதேச மோதல் தீர்வு" என்ற பதமும், "பெண்கள்" என்ற பதமும் பொதுவாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதனையடுத்து வந்த தீர்மானங்களில் பயன்படுத்தப்பட்டிருந்த மொழிப் பிரயோகம் மனப்பாங்குகள் மற்றும் கொள்கை என்பன பரிணாம வளர்ச்சியடைந்து வரும் விடயத்தை எடுத்து காட்டுகின்றது. 2008 ஆம் ஆண்டளவில் தீர்மானம் 1820 நிறைவேற்றப்பட்ட பொழுது, ஐ நா பாதுகாப்புச் சபையில் நிகழ்ச்சிநிரலை மிகவும் வன்மையாக எதிர்த்து வந்தவர்களும் கூட "சிவில் சமூகம்" என்ற பதத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அதனையடுத்து வந்த பிரதிகளில் - குறிப்பாக, தீர்மானங்கள் 1189 மற்றும் 2122 என்பவற்றில் - "சிவில் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள்" என்ற பதம் ஒரு சாதாரண மொழிப் பிரயோகமாக காணப்பட்டது.

இந்த நிகழ்ச்சிநிரல் பெண்கள் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தில் எடுக்கின்றது என பொதுவாக கருதப்பட்டு வந்தபோதிலும், மோதல் தீர்வு முயற்சிகளின் போது ஐ நா வும் சர்வதேச செயற்பாட்டாளர்களும் அரசு சாராத தரப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகியோருடன் இணைந்து செயற்பட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கும் விடயத்திலேயே அதன் பலம் தங்கியுள்ளது. இராணுவ தலையீடுகளுக்கான கதவுகளை திறந்து விடாதிருப்பதன் மூலம் சமாதானத்தை உருவாக்கும் செயன்முறை அரசின் காரியமாக மட்டுமே இருந்து வருகின்றது என்ற கருத்துக்கு அது சவால் விடுக்கின்றது. அதற்குப் பதிலாக அஹிம்சை வழியில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கும் அரசு சாராத தேசிய செயற்பாட்டாளர்களுடன் சர்வதேச சமூகம் சட்டபூர்வமாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பினை இந்த நிகழ்ச்சிநிரல் உருவாக்குகின்றது. அது சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசியல் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் கவனஞ் செலுத்தும் ஒரு செயன்முறையாக நோக்கவில்லை; அதனை ஒரு சமூகச் செயன்முறையாகவே நோக்குகின்றது.

சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் போரின் மனிதாபிமான முகத்தை வெளிப்படுத்திக் காட்டுபவர்களாக இருந்து வருகின்றார்கள். நிவாரணப் பணிகள், மீட்சி மற்றும் சமூக நீதி போன்ற விடயங்கள் தொடர்பாக பெருமளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தை ஈர்க்கும் ஒரு செயன்முறையின் வடிவில் சமாதான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன என்ற குறுகிய எண்ணக் கருவுக்கு இது சவால் விடுக்கின்றது. சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களின் பங்கேற்பு அத்தகைய பேச்சுவார்த்தைகளை பகைமைச் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் அதிகாரப் பகிர்வு என்ற எண்ணக் கருக்களுக்கு மட்டும் வரையறுக்காமல் அதற்கு அப்பாலும் எடுத்துச் செல்ல முடியும். அதாவது, போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் மற்றும் சமூகங்கள் ஆகியோர் சம்பந்தமான பொறுப்புக்களை பகிர்ந்து கொள்ளல், அனைவரையும் உள்ளடக்கும் ஜனநாயக ரீதியான எதிர்காலம் ஒன்றை கட்டியெழுப்புதல் போன்ற விடயங்களையும் அது உள்ளடக்க முடியும்.

"பேச்சுவார்த்தை மேசையில் (பெண்களை) உள்ளடக்கும் செயற்பாடு, போருக்குப் பிற்பட்ட பின்புலத்தில் அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் ஒரு செயற்பாடாகும். இந்த மாதிரியுரு பேச்சு வார்த்தைகள் முடிவடைந்த பின்னர் அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் செயன்முறைகளை தெளிவாக எடுத்துக் காட்டி, அவற்றை வடிவமைத்தல் வேண்டும்."

வேர்ஜீனியா போர்வியர்
-ஐக்கிய அமெரிக்க சமாதான நிறுவனத்தின் மூத்த ஆலோசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானம் 1325 நிகழ்ச்சிநிரல் தொடர்ந்தும் ஒரு எழுச்சியூட்டும் தாக்கத்தை கொண்டுள்ளது. ஐரோப்பிய யூனியன், ஆபிரிக்க யூனியன் மற்றும் அமெரிக்க அரசுகளின் அமைப்பு என்பவற்றையும் உள்ளடக்கிய பிராந்திய அமைப்புக்களும் இதே மாதிரியான தீர்மானங்களை கொண்டுள்ளன. சமாதானத்தை உருவாக்கும் செயன்முறையிலும், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட செயன்முறைகளிலும் பெண்களை உள்ளடக்கிக் கொள்வதற்கான தேசிய செயற்திட்டங்களை இப்பொழுது 50 க்கும் மேற்பட்ட நாடுகள் கொண்டுள்ளன. போர் இடம்பெற்று வந்த பல இடங்களில், சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் இத்தகைய திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியதுடன், சமாதானம் மற்றும் அரசியல் செயல்முறைகளில் தாமும் உள்ளடக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு வலுவூட்டுவதற்கென அவர்கள் 1325 நிகழ்ச்சிநிரலை பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள். வளப் பற்றாக்குறை மற்றும் அரசியல் விருப்பின்மை போன்ற காரணங்களினால் இதன் அமுலாக்கம் ஓரளவுக்கு பின்தங்கிய நிலைமையிலேயே காணப்படுகின்றது. ஆனால், இந்த நிகழ்ச்சிநிரலை உள்ளூர் மட்டத்துடன் பொருந்தச் செய்வது தொடர்பான திட்டங்களும், ஏனைய முயற்சிகளும் உலகளாவிய தரநியமங்களை தேசிய மட்டங்களில் வேரூன்றச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்கி வருகின்றன. மேலும், இந்த நிகழச்சி நிரல் ‘ஆண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு’ மற்றும் ‘இளைஞர்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு’ ஆகிய தலைப்புக்கள் தொடர்பாக உலகளாவிய ரீதியில் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கும் வலிகோலியுள்ளது.

“புறமொதுக்கப்பட்டிருக்கும் அல்லது களத்திலிருந்து வெகு தூரம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் எந்தவொரு குழுவும் பெருமளவுக்கு திறன்களையும், ஆற்றல்களையும், மாற்றத்தை சாதித்துக் கொள்ளும் விடயத்தில் நம்பிக்கையையும் கொண்டுள்ளது.”

-இஷ்ராக் தாபித்

சட்டத்தரணி மற்றும் பெண் உரிமை செயற்பாட்டாளர் (யெமன்)

தகராறுகள் தொடர்பாக சமாதான வழியில் மத்தியஸ்தம் செய்யும் முயற்சிகள், ஐ நா பொதுச் சபை தீர்மானம் 65/283 (2011) நிறைவேற்றப்பட்டதனையடுத்து ஐ நா உறுப்பு அரசுகளுக்கு மத்தியில் பலமான ஆதரவை பெற்று வருகின்றன. இந்தத் தீர்மானம் துருக்கி மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டது. மேலும், அது அனைவரும் உள்ளடக்கப்பட வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை குறித்தும் குறிப்பாக, பெண்களின் பங்கேற்பு குறித்தும் முக்கியமாக குறிப்பிடுகின்றது. இந்தத் தீர்மானம் மற்றும் ஏனைய செயற்பாட்டு மற்றும் தரநியமம் சார்ந்த அபிவிருத்திகள் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் ஐ நா அமைப்பு தாக்கமான மத்தியஸ்த செயற்பாடு தொடர்பான அதன் முதலாவது வழிகாட்டுதல்களை (2012) வெளியிட்டது. உலகளாவிய ரீதியில் செயற்பட்டு வரும் மத்தியஸ்தர்கள் மற்றும் இந்த துறைசார்ந்த வல்லுனர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில், இந்த ஆவணம் இது தொடர்பான முக்கியமான படிப்பினைகளை முன்வைப்பதுடன், "மிகவும் தாக்கமான ஒரு செயன்முறைக்கென மத்தியஸ்தம் தொடர்பான எட்டு அடிப்படைக் கூறுகளை" எடுத்துக் காட்டுகின்றது. அவையாவன:

1. மத்தியஸ்த குழுவின் தயார் நிலை;
2. தரப்புக்கள் தொடர்பான பக்கசார்பற்ற நிலை; ஆனால் முழுமையான நடுநிலை அல்ல; குறிப்பாக, அகிலம் தழுவிய மனித உரிமைகள் தொடர்பான தர நியமங்கள் சம்பந்தப்பட்டிருக்கும் பொழுது முழுமையான நடுநிலைமையை இது குறிக்கவில்லை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் பரந்த வீச்சிலான செயற்பாட்டாளர்கள் மத்தியில் ஒத்திசைவு மற்றும் ஒருங்கிணைப்பு;

4. நல்ல நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது தொடர்பான தரப்புக்களின் உடன்பாடு மற்றும் விருப்பம்;

5. செயன்முறை தொடர்பான தேசிய உரித்துணர்வு; பெறுபேறுகள் மற்றும் உடன்படிக்கைகளை அமுல் செய்தல் என்பன தொடர்பாக இந்த உரித்துணர்வு இருந்து வர வேண்டும்;

6. சர்வதேச சட்டங்கள் மற்றும் தர நியமம் சார்ந்த சட்டகங்கள் என்பவற்றுடன் இணங்கியொழுகுதல்;

7. மோதலில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர்கள் மற்றும் ஏனைய பங்கீடுபாட்டாளர்கள் ஆகியோரின் பரந்த வீச்சிலான பிரிவுகளை உள்ளடக்கிக் கொள்ளல்; மற்றும்

8. மோதல்களை தீர்த்து வைப்பதுடன், அவை மீண்டும் தோன்றாதிருப்பதனை தடுக்கும் நோக்கத்துடன் கூடிய தரம் வாய்ந்த சமாதான ஒப்பந்தங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெட்டி 1: சேர்க்கப்பட்ட பெறுமதி: சமாதான பேச்சுவார்த்தைகளில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் மற்றும் சிவில் சமூகம்

சமாதானம் மற்றும் மத்தியஸ்த முயற்சிகளில் சிவில் சமூகத்தின் செயற்பாட்டாளர்கள் உதவி வந்துள்ளார்கள் என்ற விடயத்தை ஆராய்ச்சி எடுத்துக் காட்டுகின்றது:

- √ சமாதான ஒப்பந்தங்கள் நீண்ட காலம் நிலைக்கும் தன்மையை விருத்தி செய்தல். 1989 ஆம் ஆண்டுக்கும் 2004 ஆம் ஆண்டுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட 83 சமாதான ஒப்பந்தங்கள் தொடர்பான பகுப்பாய்வு, அவற்றில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு இருந்து வரும் சந்தர்ப்பங்களில் ஒப்பந்தத்தை மீறுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாக இருந்து வருகின்றன என்ற விடயத்தை எடுத்துக் காட்டுகின்றது. இதற்கான வாய்ப்பு 64% குறைவாக இருந்து வருகின்றது என்பதனை அந்த ஆராய்ச்சி குறிப்பிட்டுள்ளது (அதன் மூலம் அது இத்தகைய செயன்முறைகளின் நிலைத்திருக்கக் கூடிய தன்மையை அதிகரிக்கின்றது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- √ செயல்படுதல். சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பொறுப்புக் கூற வேண்டுமென்ற விடயத்தை சிவில் சமூகம் வலியுறுத்த முடியும்; மேலும், தாமதப்படுத்தும் வழிமுறைகளை பின்பற்றுதல் அல்லது பேச்சுவார்த்தை உத்தியொன்றாக வன்முறையில் ஈடுபடுதல் என்பவற்றுக்குப் பதிலாக, உடன்பாடுகளை எட்டுமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு செய்திகளை அனுப்பி வைப்பதன் மூலமும், சமூகத்தை அணிதிரட்டுவதன் மூலமும் அழுத்தம் பிரயோகிக்க முடியும்.

- √ செயன்முறை மற்றும் ஒப்பந்தங்கள் என்பவற்றை சிவில் சமூகம் கண்காணிப்பதுடன், அவை தொடர்பான பொது மக்களின் அங்கீகாரத்தையும் மேம்படுத்துகின்றது. ஒட்டுமொத்த சமூகத்தின் சமாதான செயன்முறையையும், ஒப்பந்தத்தின் அமுலாக்கத்தையும் சிவில் சமூகம் கண்காணிப்பதுடன், சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கென தகவல்களை ஆவணப்படுத்தி, வழங்குகின்றது. மிக முக்கியமாக பொதுமக்களுக்கு அது தகவல்களை தெரிவிக்கின்றது. மேலும், சிவில் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புகள் போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் பரந்த வீச்சிலான பொது மக்களை பிரதிநிதித்துவம் செய்வதன் மூலமும், சமாதான செயன்முறைகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகள் என்பவற்றுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதிலும் மிகவும் நிர்ணயகரமான பாத்திரத்தை வகித்து வருகின்றன.

√ பரந்த குடித்தொகையினர் தொடர்பாக முக்கியத்துவம் பெற்றிருக்கும் பிரச்சினைகளை எழுப்புதல். சண்டையில் ஈடுபட்டிருக்கும் தரப்புக்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது உடனடித் தேவைகள் மற்றும் அதிகாரத்தை பெற்றுக் கொள்ளல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துகின்றன. சிவில் சமூகம் இத்தகைய பேச்சுவார்த்தைகளின் சாராம்சத்தை மாற்றியமைக்கக் கூடிய ஆற்றலை கொண்டுள்ளது. அதாவது, போர் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணங்களை கவனத்தில் எடுப்பதன் மூலமும், பரவலான பொதுமக்களின் நலன்கள், முன்னுரிமைகள் மற்றும் கரிசனைகள் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலிப்பதன் மூலமும் அது அவ்வாறு செய்ய முடியும். இது சமாதான உடன்படிக்கை தொடர்பான தேசிய உரித்துணர்வையும், அங்கீகாரத்தையும் பலப்படுத்த முடியும். அதாவது, கையொப்பமிடப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தை அமுல் செய்வதிலும், பராமரித்து வருவதிலும் தமக்கு முக்கியமான ஒரு பங்கு இருந்து வருகின்றது என்ற விடயத்தை இந்த நிலையில் பொதுமக்கள் உணர்ந்து கொள்கின்றார்கள்.

√ பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கும், புதிய அணுகுமுறைகளை உருவாக்குவதற்கும் வாய்ப்புக்களை வழங்குகின்றது. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சம்பந்தப்பட்டிருக்கும் பொழுது அவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சமகால செயன்முறைகளை அல்லது வழித்தடம் II செயன்முறைகளை அபிவிருத்தி செய்கின்றார்கள். அந்தச் செயன்முறைகள் புதிய கருத்துக்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கும், கூட்டுப் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கும் ஒரு வாய்ப்பினை வழங்குகின்றன; அல்லது இரு தரப்புக்களினதும் அரசியல் கலாசாரத்தில் மாற்றங்களை எடுத்து வருவதற்கு பங்களிப்புச் செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

√ உயரளவிலான சமூக ஒத்திசைவை போஷித்து வளர்த்து, வன்முறையை நிராகரித்தல். சிவில் சமூகத்தின் அனுசரணைக் கூடாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்களை பரந்த அளவில் உள்ளடக்கிக் கொள்வது நிலைபேறான ஒரு சமாதானத்தின் மிக முக்கியமான ஓர் உள்ளீடாக இருந்து வரும். அது சமூக ஒத்திசைவினை உருவாக்கிக் கொள்வதற்கு உதவுகின்றது. மேலும், செயன்முறையிலிருந்து தாம் ஒதுக்கப்பட்டிருப்பதாக அல்லது அதன் மூலம் உருவாக்கப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து தாம் ஒதுக்கப்பட்டிருப்பதாக குழுக்கள் கருதும் பட்சத்தில், அவை வன்முறையை கட்டவிழ்த்து விட்டால், அத்தகைய வன்முறைச் சம்பவங்களுக்கு பொதுமக்கள் வழங்கும் ஆதரவையும் சிவில் சமூகத்தினால் கட்டுப்படுத்த முடியும்.

√ நிர்ணயகரமான தொழில்நுட்ப உள்ளீடு மற்றும் தகவல்கள் என்பவற்றை வழங்குகின்றது. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் (பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள், மூலவளப் பகிர்வு, சிவில் மற்றும் மனித உரிமைகள் போன்ற) முக்கியமான பிரச்சினைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான நிபுணத்துவ அறிவை கொண்டுள்ளனர்; மற்றும்/அல்லது சமாதான செயன்முறைக்கு அவசியமான உள்ளூர் மட்ட அறிவினை கொண்டுள்ளனர்.

√ தீர்வுகள் மற்றும் பெறுபேறுகள் என்பவற்றை விருத்தி செய்வதற்கு மிக முக்கியமான கணிசமான அளவிலான பங்களிப்பினை வழங்குகின்றது. சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கடந்த காலத்தில் இடம்பெற்று வந்த வழித்தடம் I மற்றும் வழித்தடம் II என்பவற்றைச் சேர்ந்த சமாதான செயன்முறைகள் குறித்த அறிவையும் கொண்டுள்ளார்கள். அரசியல் செயற்பாட்டாளர்களிடம் இந்த அறிவு இல்லாமல் இருக்க முடியும். எனவே, இந்த நிலையில் ஒவ்வொரு சுற்று பேச்சுவார்த்தையினதும் இயங்கியல் மற்றும் சாராம்சம் என்பவற்றை தெரிவிப்பது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைவரையும் உள்ளடக்குவது தொடர்பான பொதுச் சித்திரம்: எண்ணங்கள் மற்றும் வரைவிலக்கணங்கள்

மத்தியஸ்த செயன்முறைகளின் வலிமைக்கு அனைவரையும் உள்ளடக்கும் விடயத்தை தொடர்புபடுத்தியமை, ஐக்கிய நாடுகள் வழிகாட்டுதல்கள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் மிக முக்கியமான புத்தாக்க இயல்பிலான ஒரு கருதுகோளாகும். அனைவரையும் உள்ளடக்கும் செயன்முறைகள் - குறிப்பாக, சிவில் சமூகத்தை உள்ளடக்குவதுடன் சம்பந்தப்பட்ட செயன்முறைகள்- சிறந்த பெறுபேறுகளையும், உயர் வெற்றி வாய்ப்பினையும் கொண்டுள்ளன என்ற விடயத்தை தர ரீதியான மற்றும் அளவு ரீதியான சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், அதே வேளையில், அனைவரையும் உள்ளடக்குவதன் நடைமுறை ரீதியான தாக்கங்கள் குறித்து மத்தியஸ்த நிபுணர்கள் மற்றும் சர்வதேச வல்லுனர்கள் ஆகியோருக்கு மத்தியில் இன்னமும் விவாதமும், சந்தேகமும், அச்சமும் நிலவி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

பரந்த வீச்சிலான செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிக் கொள்வதானது செயன்முறைகளை குழப்பியடிக்கவும், சிக்கலாக்கவும் முடியுமென ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் வாதிடுகின்றனர். ஆனால், இது பொய்யானது என்பதனை முன்னுதாரணங்களும், அதே போல ஆராய்ச்சியும் எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக, புருண்டி சமாதானச் செயன்முறையில் 17 ஆயுதக் குழுக்களும், கட்சிகளும் பங்கேற்றன; நேபாளத்தின் செயன்முறையில் 8 அரசியல் கட்சிகள் பங்கேற்றன. அதே போல சோமாலியாவின் சமாதானச் செயன்முறைக்கு பெருந்தொகையான சமய மற்றும் சமூகத் தலைவர்கள் பங்களிப்புக்களை வழங்கியிருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும், "அனைவரும் உள்ளடக்கிக் கொள்ளப்பட வேண்டும்" என்ற கோரிக்கை பதற்றம் மற்றும் குழப்ப நிலை என்பவற்றுக்கான மூலமாகவும் இருந்து வருகின்றது. வரைவிலக்கணத்தின் பிரகாரம், இந்த எண்ணக் கருவை அனைத்து செயற்பாட்டாளர்களும் ஏற்று, பின்பற்ற முடியும். இந்த பொதுச் சித்திரத்தின் ஒரு பக்கத்தில், அனைவரையும் உள்ளடக்கும் செயற்பாடு, போர் நிலைமைகளில் முனைப்பாக ஈடுபட்டு வரும் ஆயுதக் குழுக்களின் பரந்த வீச்சிலான தரப்புக்களை உள்ளடக்க முடியும். ஐ நா அமைப்பினால் அல்லது தனிப்பட்ட அரசுகளினால் 'பயங்கரவாதிகள்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் தரப்புக்களையும் அது உள்ளடக்க முடியும். சமாதான செயன்முறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்திறன் மிக்கவையாக இருந்து வர வேண்டுமானால் அவற்றில் அனைத்து செயற்பாட்டாளர்களும் - சர்வதேச அரசியல் சம்பந்தப்பட்ட இடையூறுகளில்லாமல் - பங்கேற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென அனுபவம் வாய்ந்த மத்தியஸ்தர்கள் அடிக்கடி வாதிட்டு வருகின்றார்கள். உதாரணமாக, உகாண்டாவின் Lord's Resistance Army (LRA) என்ற அமைப்பு நீண்ட காலமாக வெறுத்தொதுக்கப்பட்டு வந்த ஓர் அமைப்பாகும். ஆனால், இறுதியில் உகாண்டா அரசாங்கமும், சர்வதேச சமூகமும் அந்த அமைப்பை அணுகி, அதனுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டிய தேவையை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அதே போல ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான முயற்சிகள் இன்னமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

"பெண்கள் மற்றும் சிவில் சமூகத்தைச் சேரந்த தரப்புக்கள் ஆகியோருடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களை உள்ளடக்கிக் கொள்ள வேண்டுமென மத்தியஸ்தர்கள் விரும்பும் பொழுது, அதற்கான ஒரு வழியை கண்டுகொள்ள முடியும்."
சனம் நராகி அன்டர்லினி, ICAN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறத்தில், அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் எண்ணக் கரு, மோதல் வலயங்களில் முனைப்பாக செயற்பட்டு வந்த போதிலும், பொதுவாக புறமொதுக்கப்பட்டிருக்கும் அரசு சாராத நிராயுதபாணிகளான சிவில் சமூக அமைப்புக்களையும் பிணைத்துக் கொள்கின்றது. சிறுபான்மையினருக்கான அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள் மற்றும் சமூகத்தின் ஏனைய பிரிவுகளை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்கள் என்பன இதில் உள்ளடங்குகின்றன. பெண்கள் இத்துறையில் முக்கியமான செயற்பாட்டாளர்களாகவும், பங்கீடுபாட்டளர்களாகவும் இருந்து வந்துள்ளார்கள் என்ற விடயத்தை கடந்த இரண்டு தசாப்த கால அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. இவர்களில் ஒரு சிலர் ஏற்கனவே செயற்பட்டு வரும் அமைப்புக்களுக்கூடாக இயங்க முடியும்; ஏனையவர்கள் வெகுஜன இயக்கங்களுக்கூடாக அல்லது மனிதநேய நெருக்கடிகள் தோன்றும் பொழுது முதலில் எதிர்வினையாற்றுபவர்களாக எழுச்சியடைய முடியும். அவர்கள் சமூகத்தில் சமாதானத்தை உருவாக்கும் செயன்முறையிலும், நல்லிணக்க செயன்முறையிலும் அந்த நிலையில் சம்பந்தப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாதுகாப்புச் சபையில் எங்களுடன் உரையாடிய மண்டேலா, பெண்களை சம்பந்தப்படுத்திக் கொள்ளும் விடயத்தில் ஆண்கள் அக்கறை காட்டவில்லை என்ற விடயத்தை சொன்னார். மாலை நேரத்தில் அவர் அமர்ந்து (பெண்களின்) கருத்துக்களுக்கு செவிமடுப்பார்; காலையில் (அப்பெண்களின் கருத்துக்களை) அவர் தனது சொந்தக் கருத்துக்கள் போல முன்வைப்பார். ஆண்கள் அவற்றை விரும்பினார்கள். இறுதியில் இவை பெண்களின் கருத்துக்கள் என்றும், இவை தன்னுடைய கருத்துக்கள் அல்ல என்றும் அவர்களிடம் அவர் சொன்னார்...... அந்த அடிப்படையிலேயே அவர் இரண்டு இறுதி சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கும் பெண்களை எடுத்து வந்திருந்தார்."

-அன்வாருல் சௌத்திரி
ஐ நா அமைப்பின் முன்னாள்
உதவிச் செயலாளர் நாயகம

போர் களத்திற்கும், நிராயுதபாணியான சிவில் சமூகத்திற்குமிடையில் பல்வேறுபட்ட செயற்பாட்டாளர்களும், அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் இருந்து வருகின்றனர். அரசாங்க அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அக்கட்சிகளின் சார்பில் செயற்படுபவர்கள், பாரம்பரிய தலைவர்கள், வணிக சமூகம்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் குழுக்கள், தொழில் மற்றும் தொழில் சார் நிறுவனங்கள் என இத்தரப்புக்கள் பரந்த அடிப்படையில் இருந்து வருகின்றன. இங்கு தரப் பட் டுள் ள வரைபடம் இதில் சம்பந்தப்பட்டிருக்கும் செயற்பாட்டாளர்களை காட்டும் ஒரு வரைபடமாக இருந்து வருகின்றது. மத்தியஸ்தம் செய்யக் கூடியவர்கள், பேச்சுவார்த்தை நடத்தக் கூடியவர்கள் மற்றும் ஏனைய குழுக்கள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைவரையும் உள்ளடக்கும் சமாதான செயன்முறையில் பங்கேற்கும் செயற்பாட்டாளர்களின் விபரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 20 வருட காலத்தின் போது பேச்சுவார்த்தைகளில் அரசு சாராத ஆயுதக் குழுக்களை உள்ளடக்கிக் கொள்ளும் விடயத்தில் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. 1990 களில் கௌதமாலாவில் ஒரு சிவில் சமூக ஒன்றியத்தை கட்டியெழுப்பும் விடயத்தில் கிறிஸ்தவ தேவாலயம் முக்கியமாக பங்களிப்புச் செய்திருந்தது. அந்த ஒன்றியம் உள்ளூர் குழுக்கள், பெண்கள் அமைப்புக்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் ஏனையோர்கள் ஆகியோரை ஒன்றாக இணைத்தது. அவர்கள் அவ்விதம் ஒன்றாக இணைந்து ஐ நா அனுசரணையுடன் கூடிய சமாதான பேச்சுவார்த்தைகளில் அழுத்தம் பிரயோகிப்பதற்கு முன்வந்தார்கள். அண்மைக் காலத்தில் (சோமாலியா மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் இடம்பெற்றதை போல) சமாதான பேச்சுவார்த்தைகளில் சமயத் தலைவர்களையும், பழங்குடி இனத் தலைவர்களையும் உள்ளடக்கிக் கொள்வதற்கு ஐ நா அமைப்பும், ஏனைய தரப்புக்களும் தொடர்ச்சியான முயற்சிகளை முன்னெடுத்து வந்துள்ளன. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு போன்ற சர்வதேச செயற்பாட்டாளர்களையும் உள்ளடக்கிய விதத்தில் அந்த அமைப்புக்கள் புலம் பெயர் சமூகம், நாடு கடத்தப்பட்டிருக்கும் தனிநபர்கள் மற்றும் குழுக்கள் ஆகியோரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரித்துள்ளன. குறிப்பாக, ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா மற்றும் சிரியா ஆகிய நாடுகள் தொடர்பாக இது இடம்பெற்றுள்ளது. தமது சொந்த சமூகங்களில் அந்த அமைப்புக்களின் நிலைப்பாடு என்னவாக இருந்து வந்த போதிலும், சர்வதேச சமூகம் அவர்களை சட்ட ரீதியான தலைவர்கள் என்ற முறையிலும், எதிர்தரப்பின் முக்கியஸ்தர்கள் என்ற முறையிலும் அங்கீகரித்துள்ளது. அந்த அங்கீகாரம் சமாதான செயன்முறையிலும், நிலைமாற்ற செயன்முறையிலும் அவர்கள் பங்கேற்பதற்கான உரிமையை அவர்களுக்கு வழங்குகின்றது.

சமாதான செயன்முறைகளில் சிவில் சமூகத்தின் பங்கேற்பு அதன் பெறுபேறுகள் மீது எத்தகைய வெளிப்படையான எதிர்மறை தாக்கங்களையும் எடுத்து வருவதில்லை என்பதனை அனுபவ ரீதியான தரவுகளும், புள்ளிவிபர ரீதியான பகுப்பாய்வுகளும் காட்டுகின்றன. உண்மையில் அது இத்தகைய செயன்முறைகளின் தோல்விக்கான வாய்ப்புக்களை 50% வரையில் குறைத்துக் கொள்வதற்கு பங்களிப்புச் செய்ய முடியும். மேலும், சமாதான செயன்முறைகளில் பெண்களின் வலுவான பங்கேற்பு பேச்சுவார்த்தைகளின் சாராம்சம் மற்றும் தரம் என்பவற்றின் மீது ஒரு தாக்கத்தை எடுத்து வருகின்றது என்பதனையும், நிலைத்திருக்கக் கூடிய ஒப்பந்தங்கள் ஏற்படக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்களை விருத்தி செய்கின்றது என்ற விடயத்தையும் தர ரீதியான ஆராய்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.

பெண்கள் தொடர்பாக மாறி வரும் இலக்குகள் அனைத்து மோதல் நிலைமைகளிலும் பெண்கள் முனைப்புடன் செயல்பாடுகளை மேற்கொண்டு வரும் நிலைமைக்கு மத்தியிலும் கூட, சமாதான செயன்முறைகளிலிருந்து அவர்கள் (குறிப்பாக, சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள்) பெருமளவுக்கு ஓரங்கட்டப்பட்டவர்களாகவே இருந்து வருகின்றார்கள். அவர்கள் இத்தகைய செயன்முறைகளுக்கு பங்களிப்பு வழங்கி வந்துள்ளார்கள் என்பதனையும், அது தொடர்பான வலுவான சட்டகங்களை உருவாக்குவதற்கு உதவி வந்துள்ளார்கள் என்பதனையும் அனுபவ ரீதியான சான்று எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய பெண்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் பெருமளவுக்கு பேசி வந்திருந்த போதிலும், அவர்கள் தொடர்பாக அநேகமாக அது எதனையும் செய்திருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மத்தியஸ்த செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுபவர்கள் ஆகியோர் மீது கணிசமான அளவிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தவிர, பெண்கள் ஒரு குழு என்ற முறையில் பேச்சுவார்த்தைகளில் ஒரு போதும் உள்ளடக்கிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை; அதற்கு மாறாக, சமயக் குழுக்கள் போன்ற ஏனைய சிவில் சமூக அமைப்புக்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே உள்ளடக்கிக் கொள்ளப்படுகின்றன. பெண்கள் ஒரு ஒழுங்கமைந்த குழு என்ற முறையில் இத்தகைய பேச்சுவார்த்தைகளில் உள்ளடக்கப்பட்டு, பேச்சுவார்த்தை செயன்முறையின் மீது அழுத்தம் பிரயோகிப்பதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படும் பொழுது, பால்நிலை மற்றும் பெண்களின் பிரச்சினைகள் போன்ற விடயங்களுடன் மட்டும் நின்றுவிடாது, வேறு பல முக்கியமான விடயங்களை அவர்கள் நிகழ்ச்சிநிரலுக்குள் எடுத்து வருகின்றார்கள். மேலும், இத்தகைய பேச்சுவார்த்தைகளில் பெண்கள் ஒரு பாதகமான தாக்கத்தை எடுத்து வந்திருக்கின்றார்கள் என்ற விடயம் ஒரு போதும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை."

தானியா பபன்ஹோல்ஸ், ஜெனீவா Graduate Institute பங்கேற்பினை விரிவுபடுத்தும் கருத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆற்றலைக் கொண்டிருக்கும் பெண்கள் இருந்து வரவில்லை என எம்மால் கூற முடியாது. ஆற்றல் மிக்க பெருந்தொகையான பெண்கள் இருந்து வருகின்றார்கள்; முடிவுகளை எடுக்கும் செயன்முறையிலிருந்து குடித்தொகையில் பாதி அளவுக்கு மேற்பட்டவர்களை எம்மால் புறமொதுக்கிவிட முடியாது."

பெட்டி ஒக்வாரோ (தெற்கு சூடான்) *LRA* இயக்கத்திற்கும், உகண்டா அரசாங்கத்திற்குமிடையிலான மத்தியஸ்த குழுவின் உறுப்பினர்

சமாதான செயன்முறைகளில் பெண்கள் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள் எனக் குறிப்பிடப்படும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சர்வதேச ரீதியில் கொள்கை உருவாக்குபவர்கள் அது தொடர்பாக ஒரு சில கேள்விகளை எழுப்புகின்றார்கள். ஆனால், அதே மாதிரியான கேள்விகள் இச்செயன்முறையில் உள்ளடக்கப்படும். (பெண்கள் அல்லாத) நபர்கள் அல்லது பங்கேற்கும் நபர்கள் தொடர்பாக எழுப்பப்படுவதில்லை. பெண்கள் ஒன்றில் மேட்டுக்குடி சார்ந்தவர்களாக இருந்து வருகின்றார்கள் என அல்லது அடிமட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந்து வருகின்றனர் எனக் குற்றம் சாட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய தகைமைகள் மற்றும் அவர்கள் வாழ்ந்து வரும் சமூகங்களில் அவர்கள் கொண்டிருக்கும் அந்தஸ்து என்பன தொடர்பாக கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இந்தச் செயன்முறைகளுக்கு அவர்கள் சேர்க்கக்கூடிய பெறுமதி குறித்து அல்லது அவர்கள் வழங்கக் கூடிய பங்களிப்புக்கள் குறித்து சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. ஒரு சில சந்தர்ப்பங்களில் சர்வதேச செயற்பாட்டாளர்கள் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களிடம் அசாதாரணமான கோரிக்கைகளை முன்வைக்கின்றார்கள். உதாரணமாக, 2014 இல் இடம்பெற்ற சிரியா தொடர்பான ஜெனீவா II பேச்சுவார்த்தைகளின் போது ஒரு மூத்த ராஜதந்திரி சிரியாவைச் சேர்ந்த பெண்களிடம் வன்முறையில் ஈடுபட்டு வரும் தீவிரவாதக் குழுக்களை அவர்களால் தடுத்து நிறுத்த முடியுமா என்ற கேள்வியை எழுப்பியிருந்தார் (அதாவது, பெண்கள் தமது தகைமையை நிரூபித்துக் காட்டும் ஒரு வழிமுறையாக அதனைச் செய்ய வேண்டுமென அவர் குறிப்பிட்டிருந்தார்). ஆனால், இந்தச் செயற்பாட்டை இதுவரையில் எந்தவொரு அரசாங்கத்தினாலும் கூட மேற்கொள்ள முடியாதிருந்து வந்துள்ளது.

மேலும், பேச்சுவார்த்தைகளில் பெண்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென்ற விதத்தில் முன்வைக்கப்பட்டு வரும் கோரிக்கை மேலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய அரசு சாரா அமைப்புக்களினால் தூண்டப்பட்டு வருகின்றது என்றும், அதன் தரநியமம் சார்ந்த சட்டகம் யதார்த்தத்திலும் பார்க்க இலட்சியங்கள் மீது வேரூன்றி இருந்து வருகின்றது என்ற வகையிலும் தொடர்ந்தும் ஒரு தப்பெண்ணம் நிலவி வருகின்றது. திட்டவட்டமான கலாசார பின்புலங்களில் பெண்கள் வகித்து வரும் வகி பாத்திரம் மற்றும் அவர்களுடைய வலிமை என்பன குறித்து பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தவறான அபிப்பிராயங்கள் நிலவி வருகின்றன. உதாரணமாக, சோமாலியாவின் நிலைமாற்ற செயன்முறையில் பெண்களின் பங்கேற்பு தொடர்பான பிரச்சினை 2011 ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட பொழுது, சோமாலியா பாரம்பரிய கலாசாரத்தைக் கொண்ட ஒரு நாடாக இருந்து வருகின்றது என்றும், அங்கு பெண்கள் எத்தகைய அழுத்தத்தையோ, செல்வாக்கையோ பிரயோகிக்க முடியாதவர்களாக இருந்து வருகின்றனர் என்றும் மேலைத்தேய ராஜதந்திர வட்டாரங்கள் கூறின. எனினும், சோமாலிய பெண்கள் பணயக் கைதிகளை விடுவித்தல், விமான நிலையத்தை திறந்து வைத்தல், மருத்துவ மற்றும் மனிதநேய நிவாரண உதவிகளை வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாக அல்சபா இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தனர். அவர்களுடைய சமூகங்களிலும், அவர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோத்திரங்களிலும் பெண்கள் பெற்றிருந்த அந்தஸ்து போர் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கும், ஆயுதம் தரித்த தீவிரவாதிகளின் ஆயுதங்களை களைவதற்கென முகாம்களை ஸ்தாபித்து நடத்துவதற்கும், தலையிடுமாறு உரிய தலைவர்கள் மீது அழுத்தம் பிரயோகிப்பதற்கும் அவர்களுக்கு உதவியது. அதே போல ஆப்கானிஸ்தானில் பெண்கள் தொடர்ச்சியாக தலிபான் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார்கள்; அல்லது உள்ளூர் அரசியல் செயன்முறைகளில் பங்கேற்று வருகின்றார்கள். எனினும், தலிபான் இயக்கம் பெண்களுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டாது என சர்வதேச செயற்பாட்டாளர்கள் தொடர்ந்தும் கூறி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெட்டி 2: பெண்கள் என்ன சொல்கின்றார்கள்?
## பங்கேற்பு மற்றும் பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325

தெரிவு செய்யப்பட்ட முதன்மையான முடிவுகள்

1. பெரும்பாலான அரசாங்கங்கள், ஐ நா ஊழியர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் போன்ற தரப்பினர் இன்னமும் பாதுகாப்பு சபை தீர்மானம் 1325 நிகழ்ச்சிநிரலை அறியாதவர்களாக அல்லது பிழையாக புரிந்து கொண்டிருப்பவர்களாக இருந்து வருகின்றார்கள்.

2. அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச மத்தியஸ்தர்கள் ஆகிய தரப்புக்கள் தமது பணியை நிறைவேற்றி வைக்கவில்லை. சமாதான செயன்முறைகளில் பெண்களின் குரல்களை உள்ளடக்குதல் என்ற விடயம் அரசாங்கங்களின் அல்லது மத்தியஸ்த செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களின் நியமமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டு ஒழுங்குமுறைகளின் ஒரு பாகமாக இருந்து வரவில்லை.

3. தற்செயலான தெரிவு, முறையான ஓர் ஒழுங்கில்லாத நிலை என்பன பெண்கள் பங்கேற்புக்கு ஆதரவளிக்கும் தலையீடுகளை இன்னமும் நெறிப்படுத்தி வருகின்றன.

4. நிதியுதவி வழங்குபவர்கள் அவர்கள் எதனை போதித்து வருகின்றார்களோ, அதற்கு செயல் வடிவம் கொடுப்பதில்லை. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325 தொடர்பான அவர்களுடைய கொள்கைக்கும், செயல்களுக்கும், உதவி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் இடையில் ஒரு முரண்பாடு நிலவி வருகின்றது. மோதல் பின்புலங்களில் ராஜதந்திர ரீதியிலான தலையீடுகளை மேற்கொள்ளும் விடயத்திலும் இந்த முரண்பாடு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒரு தரப்பினை பேச்சுவார்த்தைகளில் உள்ளடக்கிக் கொள்வதற்கான அளவுகோலாக இன்னமும் "நீங்கள் யார்? உங்களிடம் ஒரு இராணுவம் இருக்கின்றதா?" என்ற அளவுகோலே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பெண்கள் உயர் மட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதில் அனுபவம் வாய்ந்த முக்கியமான தலைவர்களாகவும், பாரிய எண்ணிக்கையிலான ஒரு பின்புல சமூகத்தைக் கொண்டிருக்கும் அடிமட்ட செயற்பாட்டாளர்களாகவும் ஒரே நேரத்தில் இருந்து வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே பங்கேற்பதற்கான தகைமையை பெற்றுக் கொள்கின்றார்கள் போல் தெரிகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களிலும் கூட, அவர்கள் உள்வாங்கப்படுவார்கள் என்ற எந்தவித உத்தரவாதமும் இருந்து வரவில்லை. அதே வேளையில், ஆயுதம் தாங்கிய போராளிகளை பொறுத்தவரையில், வன்முறையை கட்டவிழ்த்துவிடுவதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய ஆற்றலே பேச்சுவார்த்தைகளில் அவர்கள் உள்ளடக்கப்படுவதற்கான தகைமையாக இருந்து வருகின்றது.

6. சமாதான பேச்சுவார்த்தைகள் அனைத்துமடங்கிய ஒரு சமாதானத்தை எதிர்பார்க்கவில்லை. அதற்குப் பதிலாக அவை போர் நிறுத்தங்கள், அரசியல் செயற்பாடுகள் மற்றும் மோதல் முகாமைத்துவம் போன்ற அரசியல் மேட்டுக் குடியினருக்கு பொருந்தக் கூடிய விடயங்கள் தொடர்பாகவே கவனம் செலுத்தி வருகின்றன.

7. பல அரசாங்கங்களும், சர்வதேச செயற்பாட்டாளர்களும் பெண்களின் கரிசனைகள் தொடர்பாக வாய்ச் சொல் மூலம் மட்டுமே அக்கறை காட்டி வருகின்றார்கள். ஆனால், அவற்றை பிரதான நீரோட்டத்துக்குள் எடுத்து வருவதற்கான தலையீடுகளுக்கு இந்தத் தரப்பினர் ஆதரவளிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பெண்களின் ஆற்றல்களை கட்டியெழுப்புவது, சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கவில்லை. பயிற்சி வழங்கப்படும் சந்தர்ப்பங்களிலும் கூட, ஆளுகை மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சினைகளை கையாள்வதற்கான பயிற்சியை அவர்கள் பெண்களுக்கு வழங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘சமாதான செயன்முறைகளில் அனைவரையும் உள்ளடக்கிக் கொள்வது எப்படி?’ என்ற கேள்வியை கவனத்தில் எடுத்தல்

மத்தியஸ்தம் மற்றும் மோதல் தீர்வு நடைமுறைகள் என்பன கணிசமான அளவில் மாற்றமடைந்து வந்துள்ளன; அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும் என்ற விடயம் தொடர்பான புரிந்துணர்வும் உயர் மட்டங்களில் கணிசமான அளவில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. எனினும், பெரும்பாலான முறைசார்ந்த சமாதான செயன்முறைகளில் பெண்களை உள்ளடக்கிக் கொள்வதற்கான எதிர்ப்பும், அது தொடர்பான தப்பபிப்பிராயங்களும் இன்னமும் நிலவி வருகின்றன. பெருந்தொகையான பெண்கள் தமது தேசங்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகும் சமாதான செயன்முறைகளிலிருந்து புறமொதுக்கப்பட்டுள்ளார்கள். அத்தகைய செயன்முறைகளுக்குள் அவர்கள் பிரவேசிப்பதற்கு பல சவால்கள் இருந்து வருகின்றன. மத்தியஸ்தர்கள் மற்றும் மூன்றாந் தரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்துபவர்கள் ஆகிய தரப்பினர்களுக்கு மத்தியில் நிலவி வரும் அரசியல் விருப்பின்மையும் இதற்கான ஒரு காரணமாகும். மேலும், பெண்களின் சட்டபூர்வமான தன்மை மற்றும் நிபுணத்துவ அறிவு என்பன தொடர்பாகவும் கேள்விகள் எழுப்பபப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிரச்சினையை அங்கீகரிக்கும் விதத்தில் சர்வதேச சிவில் சமூக செயல் வலையமைப்பும் (ICAN) அதன் பங்காளர் நிறுவனங்களும் இணைந்து 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் " சிறந்த சமாதானத்திற்காக பேச்சுவார்த்தை நடத்துதல்" என்ற கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தன. இக்கருத்தரங்கில் சிவில் சமூகத்தைச் சேர்ந்த செயற்பாட்டாளர்கள், அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் போன்ற தரப்புக்கள் பங்கேற்றன. இந்தக் கருத்தரங்கு அனைவரும் உள்ளடக்கிக் கொள்ளப்படுவது ஏன் என்ற கேள்விக்கு அப்பால் சென்று, அதனை முன்னெடுப்பது எப்படி என்ற கேள்வியை கவனத்தில் எடுத்தது. கருத்தரங்கில் பங்கேற்றவர்கள் பெண்களை உள்ளடக்கிக் கொள்வதில் எதிர்கொண்டு வரும் பொதுவான சவால்கள் குறித்தும், அச்சவால்கள் தொடர்பான சாத்தியமான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடினார்கள்.

இதனையடுத்து வேறு சில கருத்தரங்குகள், பிராந்திய கலந்தாராய்வுகள் மற்றும் சிறந்த சமாதான முன்னெடுப்பிற்கான நேர்காணல்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக உருவாக்கப்பட்டிருக்கும் சமாதானத்திற்கான ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கருவி (A Better Peace Tool) என்ற முன்முயற்சி இங்கு பாகம் II இல் தரப்பட்டுள்ளது. அது பெண்களை உள்ளடக்கிக் கொள்வது தொடர்பாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும் ஆறு பொதுவான இடையூறுகளை கவனத்தில் எடுக்கின்றது (பகுதி 1). மத்தியஸ்தம் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் செயன்முறை என்பவற்றில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை உள்ளடக்கி, பால்நிலை தொடர்பான கண்ணோட்டங்களை சேர்த்துக் கொள்வதற்கென கட்டமைப்பொன்றை உத்தரவாதப்ப டுத்துவதற்கென அனைத்து மடங்கிய எளிமையான சட்டகமொன்றை அது வழங்குகின்றது (பகுதி 2).



## "சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள்" யார்?

"சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள்" என்ற பதம் அஹிம்சைக்கென தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தனிநபர்கள் மற்றும் பெண்கள் தலைமையிலான அமைப்புக்கள் ஆகிய தரப்புக்களை சுட்டிக் காட்டுகின்றன; அவர்கள் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிப்பவர்களாக இருந்து வருவதுடன், மனித உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றிற்கும் ஆதரவளித்து வருகின்றார்கள். ஒரு சிலர் நீதிக்காக குரல் எழுப்பி வருவதுடன், வேறு சிலர் மோதல் எடுத்து வந்திருக்கும் தாக்கங்களை கவனத்தில் எடுப்பதற்கும் மற்றும்/ அல்லது பால்நிலை கண்ணோட்டத்துடன் கூடிய சமாதானத்தை மேம்படுத்துவதற்கும் பணியாற்றி வருகின்றார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சமாதான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென முதன் முதலில் குரல் எழுப்புபவர்களாக இப்பெண்களே இருந்து வருகின்றார்கள். ஆனால், இன்னமும் அவர்கள் புறமொதுக்கப்பட்டவர்களாவே இருந்து வருகின்றார்கள். (சிவில் சமூகத்தை இனங்காண்பது தொடர்பான மாதிரி அளவுகோல் குறித்த பெட்டி 3 – பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் II

## சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் சமாதான செயன்முறைகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் என்பவற்றுக்கான ஒரு வழிகாட்டி

மத்தியஸ்த செயற்பாடுகளில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை அணுகி, அவர்களை உள்ளடக்கிக் கொள்வது தொடர்பாக சிறந்த முன்னுதாரணங்கள் பல இருந்து வருகின்றன. துரதிர்ஷ்டவசமாக அச்செயற்பாடுகள் அவ்வப்போதைய தேவைகளைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகவே இருந்து வருகின்றன. அதற்கென நிதியுதவி வழங்கப்பட முடியும்; ஆனால், ஏனைய ஏற்பாடுகளுடன் கூடிய ஆதரவு வழங்கப்படுவதில்லை; அல்லது பெண்களை உள்ளடக்கிக் கொள்ளும் விடயம் தொடர்பாக வாய்ச் சொல்லால் மட்டுமே ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது. தொழில்நுட்ப அல்லது நிதி ஆதரவின் மூலம் அதற்கான பக்கபலம் வழங்கப்படுவதில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சமாதான செயற்பாட்டாளர்கள் தொடர்பான வரைபடங்களை தயாரிக்கும் மட்டத்திலும், சமாதானம் தொடர்பான எண்ணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவை கவனத்தில் எடுக்கும் மட்டத்திலும் பெண்களின் பிரசன்னம் இருந்து வரவில்லை. சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி இத்தகைய அவ்வப்போதைய நடைமுறைகளை தவிர்த்துக் கொள்வதற்கும், சமாதான பேச்சுவார்த்தைகளின் அனைத்து கட்டங்களின் போதும் இப்பெண்களை முறையான ஒழுங்கில் முழுமையாக உள்ளடக்கிக் கொள்வதற்கு தூண்டுதல் அளிப்பதற்குமான எளிமையான ஒரு சட்டகத்தை வழங்குகின்றது. மேலும், சமாதானத்தை உருவாக்குதல் மற்றும் மத்தியஸ்தம் போன்ற செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காகவும் இந்தச் சட்டகத்தை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி என்றால் என்ன?

சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி என்பது அனைவருக்கும் கிடைக்கக் கூடிய, பகிரங்கமான ஒரு வழிகாட்டுதல் முறையாகும். அது முறையான ஒழுங்கிலும், கட்டமைப்பு ரீதியிலும் பெண்களை உள்ளடக்கிக் கொள்ளும் விடயத்தை வலியுறுத்துவதன் மூலம் மத்தியஸ்த செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு உதவுகின்றது:

- அஹிம்சை மற்றும் சமாதானத்திற்கு சார்பாக குரலெழுப்பி, சமத்துவத்தை மதித்துப் போற்றும் சிவில் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கள் - குறிப்பாக சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள்;

- சமாதான பேச்சுவார்த்தைகளின் முக்கியமான பிரச்சினைகளின் போது பால்நிலை அடிப்படையிலான கண்ணோட்டங்களை முன்வைத்தல்.

'அனைவருக்கும் பொருந்தக் கூடிய ஒரே அளவு' என்ற அணுகுமுறை இருந்து வரவில்லை. அதற்குப் பதிலாக தாக்கமான ஒரு செயன்முறையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கென ஒவ்வொரு வேறுபட்ட பின்புலத்திலும் உள்ளடக்கிக் கொள்ளப்பட வேண்டிய அவசியமான உள்ளீடுகளை இந்தக் கருவி எடுத்துக் காட்டுகின்றது.

## இந்தக் கருவி யாருக்காக?

பல்தரப்பு அமைப்புக்கள், தேசிய மற்றும் அரசு சாரா அமைப்புக்கள், பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் தரப்புக்கள் மற்றும் ஏனையோர் ஆகியோரையும் உள்ளடக்கிய மூன்றாம் தரப்பு அரசாங்கங்களையே இந்தக் கருவி பிரதானமாக இலக்காகக் கொண்டுள்ளது. இந்தத் தரப்புக்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பாக அர்ப்பணிப்பினைக் கொண்டிருப்பார்கள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒரு மோதல் அல்லது நெருக்கடி நிலைமையின் போது மத்தியஸ்த செயற்பாட்டில் ஈடுபடுதல்;

2. மத்தியஸ்த செயற்பாட்டுக்கு ஆதரவளித்தல், நிதியுதவி அளித்தல் அல்லது அதற்கு உத்தரவாதமளித்தல்;

3. மோதல் தொடர்பாக நிலைத்து நிற்கக் கூடிய தீர்வொன்றுக்கு பங்களிப்புச் செய்தல்; மற்றும் செயன்முறையின் தோல்வி மீண்டும் பாரிய அளவிலான வன்முறையை தூண்டக் கூடிய ஆபத்தை தணித்தல்.

4. தகராறுகளின் போது சமாதான வழியிலான மத்தியஸ்த செயற்பாடுகள் தொடர்பான UNGA தீர்மானத்தை அமுல் செய்தல்;

5. பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சிநிரலை ( ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325 மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட தீர்மானங்களை) அமுல் செய்தல்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சமாதான செயன்முறைகளிலும், ஐ நா பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325 நிகழ்ச்சிநிரலிலும், சிவில் சமூக குழுக்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென பரப்புரை செய்தல்; மற்றும்/ அல்லது அவ்விதம் உள்ளடக்கப்படும் விடயத்தை கண்காணித்தல்.

## அனைத்துத் தரப்புக்களையும் உள்ளடக்கிக் கொள்ளும் விடயம் முக்கியத்துவம் பெறுவது ஏன்?



சிவில் சமூகத்தை உள்ளடக்கிக் கொள்வது சமாதான செயன்முறையின் சட்டபூர்வத் தன்மை மற்றும் நிலைத்திருக்கக் கூடிய ஆற்றல் என்பவற்றுக்கு பின்வரும் வழிமுறைகளுக்கூடாக பங்களிப்புச் செய்கின்றது:

குறிப்பிட்ட சமாதான செயன்முறை தொடர்பாக பொதுமக்களின் அங்கீகாரத்தையும், தேசிய உரித்துணர்வையும் அதிகரித்தல். செயன்முறையிலிருந்து விலக்கப்பட்டிருக்கும் குழுக்கள் செயன்முறையை தடம் புரளச் செய்வதற்கான வாய்ப்பைக் குறைத்தல்.

- தமது சமூகங்களின் எதிர்காலம் தொடர்பாக அதிகாரம், பொறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை சம விகிதத்தில் பகிர்ந்து கொள்ளும் விடயத்திற்கு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் சண்டையிடும் தரப்புக்களை பொறுப்பேற்க வைத்தல்.

- வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், மோதல்களை சமாதான வழிகளில் தீர்த்துக் கொள்வதற்குமென சண்டையில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர் மத்தியில் உயரளவிலான அரசியல் விருப்பினை ஊக்குவித்தல்;

- பாரதூரமான மனிதநேய மற்றும் மனித பாதுகாப்புப் பிரச்சினைகளை கவனத்தில் எடுத்தல்;

- பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான மாற்று வழிகளை வழங்குதல்;

- சமாதானம் தொடர்பான எமது எண்ணக் கருக்கள் மற்றும் நடைமுறை என்பன தொடர்பான கூட்டுப் புரிந்துணர்வை விரிவாக்குவதும், சமாதானத்தை கட்டியெழுப் புபவர்களின் பாண்டித்திய அறிவை ஒருங்கிணைத்துக் கொள்வதும்;

- எட்டப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களை அமுல் செய்வதற்கான கடப்பாட்டினை அதிகரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி I

## பொதுவான இடையூறுகள் மற்றும் புத்தாக்க இயல்பிலான தீர்வுகள்: அனைவரையும் உள்ளடக்கிய விதத்தில் சமாதானத்தை கட்டியெழுப்புவது தொடர்பான புதிய முன்னுதாரணங்கள் சமூக நிலைமாற்ற வடிவங்கள் என்ற முறையில் சமாதான செயன்முறைகள்

சமாதானம் மற்றும் அரசியல் நிலைமாற்றச் செயன்முறைகள் என்பன வன்முறையை முடிவுக்குக் கொண்டு வந்து, ஆயுத மோதலை தீர்த்து வைக்கும் விடயத்தில் நீண்ட காலமாக கவனம் செலுத்தி வந்துள்ளன. மேலும், இத்தகைய செயன்முறைகள் மோதல்கள் மற்றும் நெருக்கடிகள் என்பவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் அரசுகளை நிலைமாற்றம் செய்வதற்கு அத்தியாவசியமான வாய்ப்புக்களையும் வழங்குகின்றன. அவை புதிய நிறுவனங்கள், அரசியல் யாப்பு சீர்த்திருத்தங்கள், இற்றைப்படுத்தப்பட்ட நீதி முறைகள், புதிய அதிகார கட்டமைப்புக்கள் மற்றும் சமூகங்களுக்கு மத்தியிலான உறவுகள் என்பவற்றுக்கு வழிகோல முடியும். அவை இறுதியில் மோதலுக்கான மூல காரணங்களை கவனத்தில் எடுத்து, அதன் பின்விளைவுகளை தீர்த்து வைக்கும் விடயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுதல் வேண்டும். உலகளாவிய ரீதியில் பிரஜைகள் இயக்கங்கள் ஆட்சியில் அதிகரித்தளவிலான பங்கேற்புக்கான கோரிக்கையை முன் வைத்து வரும் நிலையில், சமாதான செயன்முறைகளில் குறுங்கால குறிக்கோள்களிலிருந்து – அதாவது, வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருதல் என்ற குறிக்கோளிலிருந்து - நிலைத்து நிற்கக் கூடிய சமாதானம் மற்றும் சமூக நிலைமாற்றம் போன்ற நீண்ட கால குறிக்கோள்களை நோக்கி நகர்ந்து செல்ல வேண்டுமென்ற விதத்திலும் இப்பொழுது ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது.

"சமாதான பேச்சுவார்த்தைகளில் நாங்கள் பெண்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அவர்கள் பால்நிலை மற்றும் இனத்துவம் தொடர்பான பிரச்சினைகளை எழுப்புவதுடன், ஆளுகை மற்றும் சமூக கரிசனைகள் போன்ற விடயங்களை கவனத்தில் எடுக்கின்றார்கள். அவர்கள் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்கும் போது, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கும் தரப்பினரும், அவற்றை அமுல் செய்பவர்களும் நேர்மையாக நடந்து கொள்கின்றார்கள்."

- தூதுவர் டொன் ஸ்டீன்பர்க்

*World Learning* அமைப்பின் பிரதம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான செயன்முறைகளில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை உள்ளடக்கிக் கொள்வது, சமாதானத்தை உருவாக்குவதற்கான நிலைமாற்ற அணுகுமுறையொன்றை மேற்கொள்ளும் வழியில் முன்னெடுக்கப்படும் ஒரு முக்கியமான படிமுறையாக இருந்து வருகின்றது. ஆனால், கீழே எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் இடையூறுகள் காரணமாக இன்னமும் அதனை சாதித்துக் கொள்ள முடியாதுள்ளது. சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி அனைவரையும் உள்ளடக்கிக் கொள்வது தொடர்பாக நாங்கள் எதிர்கொண்டு வரும் பின்வரும் ஆறு இடையூறுகளை வெல்வதற்கான வழிமுறைகளை முன்வைக்கின்றது:

### இடையூறு 1

“நாங்கள் அனைவரையும் பிரதிநிதித்துவம் செய்கின்றோம்”. மோதல்களில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர் பெண்கள் சமாதான பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

### இடையூறு 2

“மத்தியஸ்தம் செய்பவரினால் எல்லாவற்றையும் செய்ய முடியாது;” அல்லது பெண்களை உள்ளடக்கும் விடயம் ஒரு முன்னுரிமையாக கருதப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இடையூறு 3

"எப்படியிருந்தபோதிலும் இந்தப் பெண்கள் யார்?" சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களின் சட்டபூர்வ தன்மை தொடர்பாக கேள்வி எழுப்புதல்.

### இடையூறு 4

"இது பெண்கள் சம்பந்தப்பட்ட ஒரு விடயமல்ல." இராணுவ மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் சிவில் சமூகத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாக இருந்து வரவில்லை; அவை தொழில்நுட்ப இயல்பை கொண்ட பிரச்சினைகளாக உள்ளன.

### இடையூறு 5


"எனது சொந்த தகைமைகள் காரணமாகவே நான் இந்த இடத்தில் இருக்கின்றேன்". பெண்கள் பிரதிநிதிகள் பின்வருமாறு கூறும் பொழுது: "நாங்கள் பெண்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை"

### இடையூறு 6

"பெண்களை ஓரங்கட்டுவது கலாசார ரீதியான ஒரு நடைமுறையாகும்" மற்றும் "சமாதான பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கும் மேசை பால்நிலை சமத்துவத்தை கவனத்தில் எடுக்கும் ஒரு இடமாக இருந்து வரவில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான செயன்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் இந்த இடையூறுகள் தலைதூக்குகின்றன. அது ஒரு வரைபடமாக கீழே தரப்பட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடையூறு ஒன்று: "நாங்கள் அனைவரையும் பிரதிநிதித்துவம் செய்கின்றோம்". மோதலில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர் சமாதான பேச்சுவார்த்தை இடம்பெறும் மேசையில் பெண்களை சேர்த்துக் கொள்ள விரும்புவதில்லை.

சண்டையில் ஈடுபட்டிருக்கும் தரப்புக்கள், குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் போன்ற சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு தயாராக இருந்து வருகின்றார்கள் என்ற விடயத்தை அனுபவம் மற்றும் ஆராய்ச்சி என்பன எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், பெண்கள் தொடர்பான பிரச்சினையின் போது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு மத்தியில் கணிசமான அளவிலான ஒரு தயக்க உணர்வு நிலவி வருகின்றது. பெண்களை சமாதான பேச்சுவார்த்தை மேசையிலிருந்து ஓரங்கட்டுவது ஒரு கலாசார ரீதியான நடைமுறையாக இருந்து வருகின்றது என அத்தரப்பினர் கூறி வந்தாலும் கூட, அது அகிலம் தழுவிய ரீதியில் இடம்பெற்று வரும் ஒரு நடைமுறை என்பதனையும், பெருமளவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்நிலை சார்ந்த தர நியமங்களில் மிக ஆழமாக வேரூன்றி இருந்து வருகின்றது என்பதனையும் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. பெண்களை புறமொதுக்குவதற்கான காரணங்கள் "அவர்கள் தகுதி பெற்றிருக்கவில்லை" என்ற காரணம் தொடக்கம் " அவர்கள் பிரயாணங்களை மேற்கொள்வது பாதுகாப்பானதாக இருந்து வரவில்லை" என்பது வரையிலான காரணங்களாக இருந்து வருகின்றன. பெண்கள் போர் வலயங்களில் வாழ்ந்து வரும் நிலையிலும் கூட இக்காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.



### இந்த இடையூறை வெற்றி கொள்வது எப்படி:

1. பெண்களை உள்ளடக்கிக் கொள்வது சண்டையில் ஈடுபட்டிருக்கும் தரப்பினரின் நலன்களை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்து வருகின்றது என்பதனை குறிப்பிடவும், ஏனெனில், (அ) சமூகத்தின் அனைத்துத் தரப்பினர் தொடர்பாகவும் கரிசனை செலுத்துவதன் மூலம் அது அச்செயன்முறையின் சட்டபூர்வத் தன்மையை அதிகரிக்கின்றது; மற்றும் (ஆ) அது பேச்சுவார்த்தைகளின் சாராம்சத்தை வலியுறுத்துவதுடன், சாதாரண மக்களை பாதித்து வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் தொடர்பான அவர்களுடைய புரிந்துணர்வை விருத்தி செய்கின்றது.

2. தொழில்நுட்ப நிபுணத்துவம் கொண்டிருக்கும் பெண்கள் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் ஆகியோருடன் வலுவான உறவுகளை கொண்டிருக்கும் பெண்களை நியமனம் செய்வதற்கு அது தரப்புக்களை ஊக்குவிக்கின்றது.

3. போரினால் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோர் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் மற்றும் அதற்கு அவர்கள் எவ்வாறு எதிர்வினையாற்றி வருகின்றனர் என்ற விடயத்தை அனைத்து பேராளர்களும் புரிந்து கொள்ளும் பொருட்டு நிகழ்ச்சிநிரல் தலைப்புக்கள் தொடர்பான பால்நிலை விளக்கப் பத்திரங்களை வழங்குதல்.

4. பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது ஏனைய ஆட்சி கட்டமைப்புக்களைச் சேர்ந்த பெண்கள் ஆகியோர் உள்ளடக்கப்படுவதனை ஊக்குவித்தல்.

5. கணிசமான அளவில் பெண்களை உள்ளடக்கிக் கொள்ளும் தரப்புக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பேச்சுவார்த்தை மேசையில்) மேலதிக ஆசனங்களை வழங்குதல் போன்ற சாதகமான ஊக்குவிப்புக்களை பெற்றுக் கொடுத்தல்.

6. பெண்களுக்கான ஆகக் குறைந்தபட்ச கோட்டா முறையொன்றை ஸ்தாபித்தல்; பெண்கள் நியமனம் செய்யப்படாவிட்டால் இந்த ஆசனங்கள் வெறுமையாக இருந்து வரும்.

7. தமது சமூகத்தின் மீது தாக்கத்தை எடுத்து வரும் பிரச்சினைகளை எடுத்துக் காட்டுவதற்கும், சமாதானம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளை எடுத்துக் காட்டுவதற்கும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுக்கும் மோதலில் ஈடுபட்டிருக்கும் தரப்புக்களுக்குமிடையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு அனுசரணை வழங்குதல்.

8. பேராளர் குழுக்களில் பெண்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் பொருட்டும், சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுடன் அவர்களை தொடர்புப்படுத்தும் பொருட்டும் அவர்களுடன் புறம்பான விதத்தில் செயற்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மத்தியஸ்தர்கள் மற்றும் அவர்களுடைய குழுவினர் ஆகியோருக்கு தகவல்களை வழங்கி, ஆலோசனைகளை பெற்றுக் கொடுப்பதற்கென உள்ளூர் பெண் தலைவர்களைக் கொண்ட பால்நிலை நிபுணத்துவ ஆதரவுக் குழுக்களை ஸ்தாபித்துக் கொள்ளுமாறு தூதுவர்களை ஊக்குவித்தல்.

கொலம்பியாவில் அரசாங்க பேச்சுவார்த்தை குழுவில் இரண்டு பெண்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். அவர்களுடைய தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அறிவு என்பவற்றின் அடிப்படையிலேயே அந்த நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதே வேளையில், அவர்கள் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். கொலம்பியா சமாதான செயன்முறை முழுவதிலும் வழித்தடம் I மற்றும் வழித்தடம் II செயன்முறைகள் என்பவற்றுக்கிடையிலான பிணைப்புக்கள் பேச்சுவார்த்தை மேசைக்கும் அப்பால் பெண்கள் தமது செல்வாக்கை செலுத்துவதற்கு அவர்களுக்கு ஊக்கமளித்தன. உதாரணமாக, 2012 ஆம் ஆண்டின் பெண்கள் மற்றும் சமாதான உச்சி மாநாடு 441 பெண்களை ஒன்றாக எடுத்து வந்ததுடன், சமாதான ஒப்பந்தங்களை அமுல் செய்வது தொடர்பாக 6 முன்மொழிவுகளை உருவாக்கியது. பின்னர் அவை பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருக்கும் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடையூறு இரண்டு:
## "மத்தியஸ்தம் செய்பவர்களினால் எல்லாவற்றையும் செய்ய முடியாது," அல்லது பெண்களை உள்ளடக்கிக் கொள்வது ஒரு முன்னுரிமையாக கருதப்படுவதில்லை

வன்முறையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய விடயத்தை கருத்தில் கொண்டு, மத்தியஸ்தம் செய்பவர்கள் மத்தியஸ்த செயற்பாட்டின் ஆரம்ப கட்டங்களின் போது, பெண்கள் நேரடியாக அதில் ஈடுபட வேண்டிய தேவையில்லை என பொதுவாக கருதுகின்றார்கள். பெண்களை அதில் ஈடுபடுத்துவது மிகவும் நுட்பமான இந்தச் செயன்முறையை மேலும் சிக்கலாக்குமென ஒரு சிலர் கவலைப்படுகின்றனர்; அல்லது பேச்சுவார்த்தை மேசையின் "வேலைப் பளுவை" அதிகரிக்கும் என அவர்கள் நினைக்கின்றார்கள்; மேலும், பேச்சுவார்த்தைகள் தோல்வியடையக் கூடிய அபாயத்தை அது அதிகரிக்க முடியுமெனவும் அவர்கள் நினைக்கின்றனர். பெண்களை உள்ளடக்கிக் கொள்ளும் விடயத்துக்கு ஆதரவான நிலைமைகள் காணப்படும் இடங்களிலும் கூட "மத்தியஸ்தம் செய்பவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளாக இருந்து வரவில்லை" எனக் கூறப்படுகின்றது. பெண்களை உள்ளடக்கிக் கொள்ள வேண்டுமென எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தரப்புக்களை வலியுறுத்த முடியாதென்றும் கூறப்படுகின்றது. ஆனால், பெண்களை உள்ளடக்கிக் கொள்ள வேண்டிய தேவை பயனளிக்க கூடிய ஒரு குறிக்கோளாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை ஆராய்ச்சி எடுத்துக் காட்டுகின்றது. பல சந்தர்ப்பங்களில் போர் நிறுத்தங்களை எடுத்து வருவதிலும், பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கான ஒரு சூழலை உருவாக்குவதிலும் பெண்கள் முக்கியமான பங்களிப்புக்களை வழங்கி வந்திருக்கின்றார்கள்.

## இந்த இடையூறை வெற்றி கொள்வது எப்படி:

1. ஒரு தூதுவரை அல்லது மத்தியஸ்தரை நியமனம் செய்யும் பொழுது, பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325 ஐ அமுல் செய்யும் விடயம் அவர்களுடைய பணிப்பாணையில் உள்ளடக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

2. (உதாரணமாக பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நண்பர்கள் குழு போன்ற) பெண்களை உள்ளடக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் மூன்றாம் தரப்பு செயற்பாட்டாளர்களை அணுகி, அவர்களுடைய ஆதரவை கோரவும்:

- பெண்களை உள்ளடக்கிக் கொள்ள வேண்டிய விடயத்தை மத்தியஸ்தம் செய்பவருடன் முறைசாரா விதத்தில் கலந்துரையாடவும்; தரநியமம் சார்ந்த கடப்பாடுகள், ஒப்பந்தங்களின் செயல்திறனில் பெண்கள் எடுத்து வரக் கூடிய சாதகமான தாக்கம் மற்றும் வேறு இடங்களில் மத்தியஸ்த செயற்பாடுகளில் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கும் அனுபவம் என்பவற்றை சுட்டிக் காட்டவும்.

- சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் மற்றும் தூதுவர் ஆகிய தரப்புக்களுக்கிடையில் ஒரு சந்திப்புக்கு அனுசரணை வழங்கவும்; அல்லது சந்திப்பை ஏற்படுத்தவும். செயன்முறையின் தொடக்கத்திலிருந்தே தரப்புக்கள் முறையான ஒழுங்கில் தொடர்புகளை மேற்கொண்டு வருவதனை ஊக்குவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெண்கள் குழுக்களுடன் அவர்கள் கொண்டிருக்கும் தொடர்புகள் குறித்து அறிக்கையிடுமாறு தூதுவரிடம் முறையாக ஒரு வேண்டுகோளை முன்வைக்கவும்.

- மத்திஸ்த குழு தொடக்கத்திலேயே நன்கு அனுபவம் வாய்ந்த பால்நிலை/ உள்ளடக்குதல் ஆலோசகர் ஒருவரை கொண்டிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும். நிதியளிப்பு மற்றும் நியமனத்தை கண்காணித்தல் என்பவற்றுக்கூடாக இதனை மேற்கொள்ள முடியும்.

3. முன்னர் பெண்களின் பங்களிப்பை பெற்றுக்கொண்டிருந்த தூதுவர்களை நினைவுபடுத்தி, பெண்களை உள்ளடக்கிக் கொள்ளும் விடயம் எவ்வாறு சாதித்துக் கொள்ளப்பட்டது என்பது தொடர்பான மாதிரிகளை வழங்கவும்.

4. செயன்முறைகளில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை உள்ளடக்கிக் கொள்வதன் பயன்கள் மற்றும் அது தொடர்பான சாதகமான அனுபவங்கள் தொடர்பாக ஏனைய மத்தியஸ்தர்கள் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுவர்கள் ஆகியோரிடமிருந்து பெற்று வழங்கவும்.

5. பல்வேறு தலைப்புக்கள் தொடர்பாக ஏற்கனவே அமுலில் இருந்து வரும் ஒப்பந்தங்களின் பால்நிலை சார்ந்த சொற்பிரயோகங்கள் குறித்த மாதிரிகளை வழங்கவும்.

6. பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கும் சர்வதேச நிறுவனங்களுடன் கலந்தாலோசனை செய்யவும்; மேலும், அவர்களுக்கு எந்த விதத்தில் மிகச் சிறப்பாக ஆதரவினை வழங்க முடியும் என்பதனை அறிந்து கொள்ளும் பொருட்டு, சமாதானத்தை கட்டியெழுப்பும் உள்ளூர் பெண்கள் குழுக்களுடனும் கலந்தாலோசனைகளை நடத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ நா விசேட தூதுவர் மேரி ரொபின்ஸன் 2014 ஆம் ஆண்டில் சமாதானம், பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றுக்கான *Great Lakes* பெண்கள் அரங்கு என்ற அமைப்பை துவக்கி வைத்தார். கொங்கோ ஜனநாயக குடியரசிலும், பிராந்தியத்திலும் சமாதான ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் பெண்களின் வகி பாத்திரத்தை மேம்படுத்துவதே அந்த அமைப்பின் நோக்கமாக இருந்து வந்தது. அந்த அமைப்பு சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுக்கு நிதியுதவிகளை வழங்குவதுடன், (தமது அங்கத்துவத்திலிருந்து பெருமளவுக்கு பெண்களை புறமொதுக்கியிருக்கும்) தேசிய மற்றும் பிராந்திய கமிட்டிகளுடன் அவர்களை தொடர்புபடுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடையூறு மூன்று:
## "எப்படியிருந்தபோதிலும், இந்தப் பெண்கள் யார்?"
## சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களின் சட்டபூர்வத் தன்மை குறித்து கேள்வி எழுப்புதல்

ஒரு குழுவின் அல்லது தனிநபர்களின் சட்டபூர்வ அந்தஸ்து தொடர்பாக கேள்வி எழுப்புதல், மத்தியஸ்த செயன்முறையிலிருந்து அவர்களை ஓரங்கட்டுவதற்கான நிச்சயமான ஒரு வழிமுறையாக இருந்து வருகின்றது. பெண்களை உள்ளடக்கும் விடயத்தில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த 'சட்டபூர்வத் தன்மை' தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது. அப்பெண்கள் ஒன்றில் 'அடிமட்டத்தைச் சேர்ந்தவர்கள்' அல்லது 'பெருமளவுக்கு மேட்டுக்குடியினர்' என வகைப்படுத்தப்பட்டு வருகின்றனர் - எனவே, அந்த நிலையில் சமாதான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கான நம்பகத்தன்மையோ, தகைமைகளோ அவர்களிடம் இருந்து வரவில்லை எனக் கூறப்படுகின்றது. அதே வேளையில், சமயத் தலைவர்கள் அல்லது ஏனையவர்கள் போன்ற சிவில் சமூகக் குழுக்கள் இந்த தகைமை தொடர்பான எத்தகைய தடங்கல்களும் இல்லாத விதத்தில் பேச்சுவார்த்தை செயன்முறையில் உள்ளடக்கப்படுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறிருப்பினும், ஆயுதபாணிகளாக இருந்து வருவதுடன், வன்முறையை பயன்படுத்தி வரும் குழுக்களின் சட்டபூர்வத் தன்மை குறித்து மிக அரிதாகவே கேள்வி எழுப்பப்படுகின்றது; ஏனெனில், வன்முறையின் மூலம் இச்செயன்முறையை சீர்குலைக்கக் கூடிய ஆற்றலை அவர்கள் கொண்டுள்ளார்கள்; எத்தகைய கேள்விகளும் இல்லாமல் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்குமாறு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. இந்த இரட்டை அணுகுமுறை, வன்முறையை உருவாக்கியவர்களுக்கு பேச்சுவார்த்தை மேசையில் ஒரு ஆசனத்தை வழங்குவதன் மூலம் வன்முறைக்கு ஊக்கமளிக்கும் ஆபத்தினை கொண்டுள்ளது. அதே வேளையில், அஹிம்சை வழியில் மோதல்களை தீர்த்து வைப்பதற்கென தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் மற்றும் ஏனைய சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் உதாசீனம் செய்யப்படுகின்றனர்.

## இந்த இடையூறை வெற்றி கொள்வது எப்படி:

1. மோதல்களின் போது சமாதானத்திற்காக பெண்கள் வழங்கியிருக்கும் தலைமைத்துவத்தின் வரலாறு, கடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் அவர்கள் அணிதிரட்டப்பட்ட விதம் மற்றும் அதன் மூலம் கிடைத்த பயன்கள், சமாதானத்தை உருவாக்குதல், மத்தியஸ்த செயற்பாடு, போர் நிறுத்த உடன்படிக்கைகள் என்பவற்றில் அவர்கள் முன்னெடுத்திருக்கும் பணிகள் மற்றும் சமூக கலாசார மாற்றத்தில் அவர்கள் வகிக்கும் பாத்திரம் என்பன குறித்த வரலாற்றையும் ஆராயவும்.

2. பேச்சுவார்த்தை மேசையில் பங்கேற்கும் ஆண்களின் தகைமைகள் தொடர்பாக சிந்தித்துப் பார்ப்பதன் மூலமும், கேள்வி எழுப்புவதன் மூலமும் பெண்கள் 'பெருமளவுக்கு மேட்டுக்குடி இயல்பினை' கொண்டிருக்கின்றனர்; அல்லது 'அடிமட்டத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்' அல்லது அவர்கள் இதற்கான தகுதியை கொண்டிருக்கவில்லை என முன்வைக்கப்படும் வாதங்களை நிராகரிக்கவும்.

3. 'போதியளவில்1 உள்ளடக்கும்' செயன்முறைக்கான சூத்திரமொன்றை முன்மொழியவும். அடிப்படை விழுமியங்கள், ஆற்றல்கள் மற்றும் ஆதரவாளர் அடித்தளம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் சமூக அமைப்புக்களை உள்ளடக்குவதற்கான அளவுகோலை இது வழங்குதல் வேண்டும் (பார்க்கவும் பெட்டி 3 – சிவில் சமூகத்தை இனங்காண்பதற்கான மாதிரி).

4. சமாதான செயன்முறைக்கான ஒரு கொள்கை விளக்க அறிக்கையை அபிவிருத்தி செய்வதற்கென பொது மக்களுடனான கலந்தாலோசனையை நடத்துவது தொடர்பாக பெண்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவும். தமது பிரதிநிதித்துவம் தொடர்பான தேர்தல் அல்லது தெரிவு என்பவற்றை மேற்கொள்வதற்கான உடன்பாடுகளை இந்த அறிக்கை கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியாவில் உள்ளூர் போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் பெண்கள் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜெனீவாவில் ஐ நா அனுசரணையுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது அவர்கள் பெருமளவுக்கு ஒதுக்கப்பட்டிருந்தனர். சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் மற்றும் சிரியாவுக்கான ஐ நா தூதுவர் ஆகியோருக்கிடையிலான ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்வதற்கென இம்முயற்சிக்கு ஆதரவு வழங்கிய மூன்றாம் தரப்பு அரசாங்கங்கள் அச்சந்தர்ப்பத்தில் தமது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தியிருந்தன. பெண் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தையின் அந்தச் சுற்றில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதே வேளையில், முறையான செயன் முறையுடன் தொடக்கத்திலேயே அவர்கள் அவ்விதம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் பயனடைந்தனர். பெண்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென வெளியிலிருந்து பிரயோகிக்கப்பட்டு வந்த அழுத்தம் முறையான விதத்தில் இடைத் தொடர்புகள் ஏற்படுவதற்கு வலிகோலியது:

இன்று சிரியாவைச் சேர்ந்த பெண்கள் ஏனைய முறைசார்ந்த மத்தியஸ்த செயன்முறைகளிலும் பார்க்க பேச்சுவார்த்தை I ஐ ஒன்றை அதிகளவில் அணுகக் கூடிய வாய்ப்பு இருந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெட்டி 3: மத்தியஸ்த செயற்பாட்டில் உள்ளடக்கிக் கொள்வதற்கென சிவில் சமூகத்தை இனங்காண்பதற்கான மாதிரி அளவுகோல்

மோதல் இடம்பெற்று வரும் பின்புலங்களில் பழைய மற்றும் புதிய சிவில் சமூகக் குழுக்கள் இருந்து வருகின்றன. மத்தியஸ்த செயன்முறையில் அவற்றை உள்ளடக்கிக் கொள்ளும் பொருட்டு, எந்த அமைப்பு சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு பங்களிப்புச் செய்ய முடியுமென்ற விடயத்தை இனங்கண்டு கொள்வதற்கென ஒரு சில அளவுகோல்கள் தேவைப்படுகின்றன. சர்வதேச மத்தியஸ்த நிபுணர்கள் மற்றும் சமாதானத்திற்கென உலகளாவிய ரீதியில் பரப்புரை மேற்கொள்பவர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட கலந்தாராய்வுகளிலிருந்து பின்வரும் மாதிரி அளவுகோல் பெறப்பட்டுள்ளது:

**பின்வருவன தொடர்பான அடிப்படை விழுமியங்கள் மற்றும் அர்ப்பணிப்புணர்வு:**

- அஹிம்சை மற்றும் தகராறுகளை சமாதான வழியில் தீர்த்துக் கொள்ளல்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் சமாதானம்;
- பாதுகாப்பு மற்றும் ஆளுகை தொடர்பான பிரச்சினைகளில் பால்நிலை தொடர்பான கூருணர்வு;
- அரசியல் சுயாதீனம் மற்றும்/ அல்லது கட்சி சாராத நிலை;
- பிரதிநிதித்துவம்/ பெண்கள், இளைஞர் யுவதிகள், சிறுபான்மையினர் மற்றும் ஓரங்கட்டப்பட்டிருக்கும் குடித் தொகையினர் போன்ற பன்முகப்பட்ட பிரிவினரை உள்ளடக்கிக் கொள்ளல்.

**ஆகக் குறைந்தது பின்வரும் துறைகளில் ஒரு துறையில் திறமைகளை கொண்டிருத்தல்:**

- கள யதார்த்த நிலைமைகள் குறித்த நடைமுறை அனுபவம் மற்றும் பால்நிலை கண்ணோட்டத்துடன் கூடிய புரிந்துணர்வு;
- பெண்களை மற்றும் சிவில் சமூகக் குழுக்களை பிரதிநிதித்துவம் செய்யும் விடயத்தில் பரந்த அனுபவம்;
- உதவி, ஆரம்ப மீட்சி அல்லது மாற்று வாழ்வாதாரங்கள் என்பவற்றை வழங்குதல்;
- ஆயுதக் குழுக்களை அணுகக் கூடிய நிலை மற்றும்/ அல்லது ஆயுதக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களுக்கான ஆட்சேர்ப்பினை தடுத்தல்;

- ஆயுதக் களைவு/புனர்வாழ்வளித்தல் மற்றும் பிரஜைகளின்/ சமூகத்தின் பாதுகாப்பு;
- குறிப்பாக சமூகங்களுக்கு மத்தியில் மத்தியஸ்தம்/ சமாதானத்தை உருவாக்குதல் என்பவற்றில் அனுபவம்;
- சமூக ஒத்திசைவு மற்றும் சமாதான கலாசாரம் என்பவற்றை மேம்படுத்துதல்;
- நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகளில் கவனம் செலுத்துதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுடன் பணியாற்றுதல்;
- உள்ளூர் சமூகங்கள் மற்றும் பெண்களின் தேவைகள் என்பன குறித்த புரிந்துணர்வுடன் கூடிய விதத்தில் தேசிய வளங்கள் மற்றும் காணி உரிமைகள் என்பவற்றையும் உள்ளடக்கிய வளங்கள் தொடர்பான பிரச்சினைகள்.

## பின்புலத்திலிருக்கும் ஆதரவு குழுக்களின் இயல்பு:

தமது பின்புலத்தில் ஆதரவுக் குழுக்களை கொண்டிருக்கும் விடயத்தில் ஒவ்வொரு அமைப்பும் வேறு விதமான ஆழ அகலங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்க முடியும். எனினும், பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் நிறுவனங்களை கொண்டிருப்பது பயனுள்ளதாகும்:

- களத்தில் சமூகத்துடன் ஒரு பிணைப்பை கொண்டிருத்தல்;
- புறமொதுக்கப்பட்ட குழுக்களையும் உள்ளடக்கிய விதத்தில் உள்ளூர் சமூகங்களுக்கு தகவல்களை தெரிவிப்பதற்கும், அவர்களுடைய கருத்துக்களை கேட்பதற்குமான பின்னூட்டல் பொறிமுறைகள்;

- பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கி, அதன் மீது செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல்;

- பெண்கள், இளைஞர் யுவதிகள், சிறுபான்மை குழுக்கள் மற்றும்/ அல்லது பூகோள /இனத்துவ பிரதேசங்கள் / சமய சமூகங்கள் ஆகிய தரப்புக்களின் பன்முக பிரதிநிதித்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடையூறு நான்கு:
## "இது பெண்கள் சம்பந்தப்பட்ட ஒரு விடயமல்ல:"
## இராணுவ மற்றும் பாதுகாப்பு விவகாரங்கள் 'தொழில்நுட்ப' விவகாரங்களாக இருந்து வருவதுடன், அவை சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுடன் 'சம்பந்தப்பட்டிருக்கவில்லை'

இராணுவம் மற்றும் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகள் பெண்களின் கரிசனைகளுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றும், அதன் காரணமாக சமாதான பேச்சுவார்த்தைகளில் பெண்கள் உள்ளடக்கப்படவில்லை என்றும் ஒரு சிலர் வாதிடுகின்றனர். அதற்கு மாறான விதத்தில், "பெண்களின் பிரச்சினைகள்" பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயங்களை கவனத்தில் எடுக்கும் ஒரு நிகழ்ச்சிநிரலுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்ற விதத்திலும் ஒரு கருத்து நிலவி வருகின்றது. ஆனால், இந்தப் பிரச்சினைகள் மோதல் இயங்கியலில் வகித்து வரும் மிக முக்கியமான பாத்திரத்தை இந்த மனப்போக்கு அலட்சியம் செய்கின்றது - பாலியல் வன்முறை தொடக்கம் போர் நிறுத்த ஒப்பந்தங்களின் போது பொது மக்களின் தேவைகள் வரையில் இக்கரிசனைகள் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. சமாதான பேச்சுவார்த்தைகளில் பெண்கள் உள்ளடக்கப்படும் சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்படும் பிரச்சினைகளின் தொகுதியை அவர்கள் இடையறாது விரிவுபடுத்துவதுடன், குறுங்கால மற்றும் நீண்ட கால பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளை எழுப்புகின்றார்கள். இது இறுதியில் அனைத்துமடங்கிய ஒரு ஒப்பந்தத்தை எடுத்து வருவதற்கும், நிலையான ஒரு சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வழி கோலுகின்றது.

### இந்த இடையூறை வெல்வது எப்படி:

1. பெண்கள் எழுப்பும் பெரும்பாலான பிரச்சினைகள் பாதுகாப்புடன் தொடர்புபடுத்தப்பட்ட பிரச்சினைகளாக இருந்து வருகின்றன என்ற விடயத்தை சுட்டிக் காட்டவும். கண்ணிவெடிகள் வைக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் குறித்த அறிவு, அச்சுறுத்தல்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்புத் தேவைகள் என்பன குறித்த அறிவு என்பவற்றை பெண்கள் கொண்டுள்ளார்கள். ஆயுதம் தாங்கிய செயற்பாட்டாளர்கள் பொதுவாக இந்தப் பிரச்சினைகளை எழுப்புவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வன்முறையின் மாறிவரும் போக்குகள் குறித்த பெண்களின் துல்லியமான புரிந்துணர்வையும், அவர்கள் ஆபத்துக்களை கண்காணித்து வரும் விடயத்தையும் எடுத்துக் காட்டவும்; மோதல் இடம்பெறும் பின்புலங்களில் அவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெளியில் நடமாடுவதுடன், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய பெறுமதி மிக்க உள்ளூர் அறிவினையும் கொண்டுள்ளார்கள்.

3. பெண்கள் சமூகத்தில் தமது தொடர்புகளை பராமரித்து வருகின்றார்கள் என்ற விடயத்தையும், போர் நிறுத்த/ கண்காணிப்புக் குழுக்களின் மிகச் சிறந்த உறுப்பினர்களாக செயற்பட முடியும் என்ற விடயத்தையும் எடுத்துக் காட்டவும்.

4. சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை பொறுத்தவரையில் அவர்கள் வாழ்ந்து வரும் சமூகங்களுக்கு மத்தியில் அவர்கள் குறித்து மக்களிடம் ஒரு நம்பிக்கை நிலவி வருகின்றது என்ற விடயத்தை நினைவில் வைத்துக் கொள்ளவும்; மக்களின் எண்ணங்களை எடுத்துக் காட்டும் கருத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிப்புக்களுக்கு அவர்கள் ஆதரவளிக்க முடியும்; பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், போர் நிறுத்தங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் என்பன தொடர்பான பொது மக்களின் அபிப்பிராயங்கள் குறித்த பெறுமதிமிக்க கருத்துக்களை சேகரிக்கக் கூடியவர்களாகவும் அப்பெண்கள் இருந்து வருகின்றார்கள்.

5. மோதல்கள் சம்பந்தப்பட்ட பாலியல் வன்முறை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மோதலை தீவிரப்படுத்தும் ஒரு முக்கியமான காரணியாகவும், அது போர் நிறுத்த ஒப்பந்தங்கள் எளிதில் மீறப்படுவதற்கு வழிகோலும் ஒரு காரணியாகவும் இருந்து வருகின்றது என்ற விடயத்தை அறிந்திருக்கவும்; சமாதான பேச்சுவார்த்தைகளின் போது இந்தப் பிரச்சினை கவனத்தில் எடுக்கப்பட்டால், பரந்த செயற்பாட்டின் மீது அது நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும். மேலும், பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் அதன் விளைவாக ஏற்படக் கூடிய தீங்குகளையும் கட்டுப்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நிறுத்த ஒப்பந்தங்களை கண்காணிப்பதற்கென பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் சிவிலியன் பாதுகாப்புக் குழுக்களின் முதலாவது அனைத்து மகளிர் பிரிவினை மின்டானோ மக்கள் சபை 2010 அக்டோபர் மாதத்தில் ஆரம்பித்து வைத்தது. முதலில் இக்குழுவில் இணைந்து கொண்ட 30 பெண்மணிகள் பிலிப்பைன்ஸ் நெடுகிலும் வாழ்ந்து வந்த பன்முகப்பட்ட இனத்துவ மற்றும் சமய குழுக்களை பிரதிநிதித்துவம் செய்தனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களின் போர் அனுபவங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1325 என்பன தொடர்பாக கவனத்தை ஈர்க்கும் விடயத்தில் கடினமாக உழைத்து வந்திருந்தனர். அவர்களுடைய வயதுப் பிரிவு 20 தொடக்கம் 62 வரை இருந்து வந்ததுடன், மின்டானோவில் மோதலினால் பாதிக்கப்பட்ட அனைத்து பிரதேசங்களிலும் அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். பொது மக்களின் பாதுகாப்பு தொடர்பான கண்காணிப்புக்களை மேற்கொள்ளல், மோதலில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர் வணக்கஸ்தலங்கள் போன்ற புனித இடங்களுக்கு மரியாதை அளிப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல், உள்ளூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கும், உள்நாட்டில் இடம்பெயர்ந்திருப்பவர்களுக்கும் நிவாரணப் பொருட்களை விநியோகித்தல், சமாதான செயன்முறையை உள்ளூர் மக்கள் அங்கீகரிக்கக் கூடிய விதத்தில் செயற்படுதல் என்பன இவர்களின் பணிப்பாணையாக இருந்து வந்தது. பெண்கள் இவ்விதம் ஈடுபடுத்தப்படுவது தொடர்பாக தொடக்கத்தில் ஒரு சில இராணுவ மற்றும் சமயத் தலைவர்கள் சந்தேகம் தெரிவித்து வந்த போதிலும், இது தொடர்பாக சமூகம் காட்டிய எதிர்வினை மிகவும் சாதகமான இருந்து வந்தது. அவர்களுடைய பன்முகத்தன்மை காரணமாக அப்பெண்கள் போரில் ஈடுபட்டிருந்த பல்வேறு சமூகங்களுக்கிடையில் ஒரு பாலமாக செயற்பட்டார்கள். அவர்கள் நீண்ட காலம் போர் அனுபவத்திற்கூடாக வாழ்ந்து வந்திருப்பதனால் பொது மக்கள் தொடர்பான ஆழமான நேசத்தையும், அர்ப்பணிப்புணர்வையும் கொண்டிருந்ததுடன், இராணுவம் மற்றும் கிளர்ச்சிக்காரர்கள் ஆகியோருடன் ஆக்கபூர்வமான விதத்தில் தொடர்புகளை மேற்கொள்வதற்கான விருப்பத்தினையும் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடையூறு ஐந்து:
## "எனது சொந்த தகைமைகள் காரணமாகவே நான் இந்த இடத்தில் இருக்கின்றேன்."
## பெண் பிரதிநிதிகள் பின்வருமாறு கூறும் பொழுது - "நாங்கள் பெண்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை"

பெண்களை உள்ளடக்கிக் கொள்வதற்கான எதிர்ப்பு ஆயுதக் குழுக்கள் அல்லது அரச துறையினர் ஆகியோரிடமிருந்து மட்டும் வருவதில்லை. சிவில் சமூகமும் கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடியும். இது பெண் பேராளர்களுக்கும் அல்லது பிரதிநிதிகளுக்கும் மற்றும் சிவில் சமூகக் குழுக்களுக்குமிடையில் பதற்ற நிலைமையை ஏற்படுத்த முடியும். ஒரு சில சந்தர்ப்பங்களில் பெண் பேராளர்கள் களத்திலிருக்கும் பெண்களிலிருந்து தம்மை தூரப்படுத்திக் கொள்ள முனைகின்றார்கள். ஏனெனில், பேச்சுவார்த்தை மேசையில் தாம் பெற்றிருக்கும் இடம் தமது கடின உழைப்பு மற்றும் தகுதி என்பவற்றின் அடிப்படையில் பெறப்பட்டிருக்கவில்லை என்றும், அதற்கு மாறாக பெண்கள் என்ற அடிப்படையில் ஒரு அடையாளமாகவே அந்த இடம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்றும் ஆட்கள் கருத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என்ற அச்சத்திலேயே அவர்கள் அவ்வாறு செய்கின்றனர். பேச்சுவார்த்தை மேசையில் வெறுமனே ஒரு பெண்மணி அமர்ந்திருப்பது, அவர் தனது நாட்டின் அனைத்து பெண்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றார் என்பதனையோ அல்லது சமாதானத்தை கட்டியெழுப்பும் சமூகத்துடன் அவர் பிணைப்புக்களை கொண்டுள்ளார் என்பதனையோ காட்டவில்லை என்ற விடயத்தை நாங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

## இந்த இடையூறை வெல்வது எப்படி?

1. பெண் பேராளர்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பெண்களுடன் தொடர்ந்தும் உறவுகளை பராமரித்து வருவதற்கும், அவர்கள் அந்த நிலையை எட்டுவதற்கு அவர்களுக்கு ஆதரவளித்த சிவில் சமூகக் குழுக்களுடன் தொடர்புகளை பராமரித்து வருவதற்கும் அவர்களை ஊக்குவிக்கவும்.
2. பெண் பேராளர்களை அந்த தலைமைத்துவ அந்தஸ்துக்கு மேம்படுத்தி, அவர்களுடைய நியமனத்திற்கென பரப்புரை செய்த குழுக்களுடன் தொடர்புகளை பராமரித்து வருவதற்கு உதவும் ஒழுக்கநெறிக் கோவையொன்றை உருவாக்கவும். இவ்விதம் அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்துடன் ஓரளவுக்கு பிணைக்கும் ஒப்பந்தம் சமாதான செயன்முறை தொடர்பான பெண்களின் பொது நோக்கொன்றை ஆணித்தரமாக முன்வைப்பதற்கு உதவும்.

3. பேச்சுவார்த்தை மேசையில் ஆசனங்களை பெற்றுக் கொண்டிருக்கும் பெண்களுக்கு ஆதரவையும், வழிகாட்டுதல்களையும் வழங்கவும். மேலும், அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் நீண்ட கால பயிற்சிகளை வழங்குவதற்கென முதலீடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பெண்கள் உடல் ரீதியில் ஆபத்துக்களை எதிர்கொள்ளக் கூடிய சூழ்நிலைகளில் பணியாற்றுவதற்கு அவர்களுக்கு ஆற்றலை பெற்றுக் கொடுக்கும் ஆக்கபூர்வமான வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டு, இப்பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும். குறிப்பாக, மோதலுடன் சம்பந்தப்பட்ட துறைகளில் பெண்களுக்கு அறிவு மற்றும் திறன்கள் என்பன வழங்கப்படுதல் வேண்டும். இது சமாதான செயன்முறையை மேம்படுத்துவது மட்டுமன்றி, அப்பெண்களும் ஒரு சொந்த நம்பகத்தன்மையை ஈட்டிக் கொள்வதற்கு உதவ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பேச்சுவார்த்தைகளில் செல்வாக்குச் செலுத்துவது தொடர்பான உபாய ரீதியான பயிற்சியை வழங்குதல்; உதாரணமாக, பெண் பேராளர்கள் ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையிலான ஒரு பாலத்தை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள இருப்பதுடன், அந்தஸ்து மற்றும் சிரேஷ்ட நிலை என்னவாக இருந்த போதிலும், ஆண் சகாக்களையும் அவர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் பிரதிநிதிகள் பெண்களின் உரிமைகள் தொடர்பாக பாரிய அளவில் பரப்புரை செய்யக் கூடிய உள்ளார்ந்த ஆற்றலை கொண்டுள்ளார்கள். மேலும், சிவில் சமூகத்தின் விழுமியங்களுக்கு ஆதரவளிப்பவர்களாகவும் அவர்கள் இருந்து வருகின்றார்கள். எனினும், இப்பெண்கள் தலைமைத்துவ பதவிகளை பெற்றுக் கொண்ட பின்னர் திறமையுடன் செயற்படும் பொருட்டு அவர்களுக்கு ஆதரவு, அறிவு என்பன வழங்கப்பட வேண்டும். தற்போதைய மோதல் நிலவரங்களில் இந்த நிலைமை மிக வித்தியாசமான விதத்தில் இடம்பெற்று வந்துள்ளது. தெற்கு சூடானில் இவ்விதம் நியமனம் செய்யப்பட்ட பெண்கள் சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் பெண்கள் குழுக்களுடனான தமது இணைப்புக்களை முறித்துக் கொண்டதுடன், அரசாங்க கட்சி நிலைப்பாட்டுக்கு ஆதரவாக செயற்பட்டு வந்துள்ளனர். எவ்வாறிருப்பினும், பிலிப்பைன்ஸில் அரசாங்க குழுவிலிருந்த பெண் பேச்சுவார்த்தையாளர்கள் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் ஆகிய தரப்புக்களுடன் வலுவான தொடர்புகளை பராமரித்து வந்தனர். அவர்கள் சமாதான பேச்சு வார்த்தைகளிலும், பங்ஸ்மாரோ நிலைமாற்றக் கால சட்டம் தொடர்பான விவாதங்களிலும் வலுவான உள்ளீடுகளை வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடையூறு ஆறு:
## "பெண்களை புறமொதுக்குவது ஒரு கலாசார ரீதியான விடயமாகும்" மற்றும் "சமாதான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் மேசை பால்நிலை சமத்துவத்தை கவனத்தில் எடுப்பதற்கான ஒரு இடமாக இருந்து வரவில்லை"

சமாதான செயன்முறைகளிலிருந்து பெண்களை புறமொதுக்குவது ஒரு கலாசார நடைமுறையாக இருந்து வந்தால் - பல வழிகளில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட நாடுகளான – கொலம்பியா மற்றும் சிரியா, பர்மா மற்றும் புருண்டி ஆகிய நாடுகளிலிருந்து முக்கியமான பல வேறுபாடுகளை எம்மால் அவதானிக்க முடிகின்றது. எனினும், இந்த அனைத்து நாடுகளிலும் சமாதானத்தை உருவாக்கும் செயற்பாட்டிலிருந்து பெண்களை புறமொதுக்குவது ஒரு பொதுவான விடயமாக இருந்து வந்துள்ளது. அது அகிலம் தழுவிய ஒரு நிலைமையாகவும் காணப்படுகின்றது. சமாதான பேச்சுவார்த்தை இடம்பெறும் மேசை அதிகாரம் பகிர்ந்து கொள்ளப்படுவதுடன், அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்படும் ஒரு இடமாக இருந்து வருகின்றது. பேச்சுவார்த்தைக்கென மேசைக்கு வருபவர்கள் அதனை அதற்கு மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளவோ அல்லது மாற்று சக்திகளுக்கு பொறுப்புக் கூறவோ விரும்புவதில்லை. அதே வேளையில், சமாதான பேச்சுவார்த்தை இடம்பெறும் மேசை, பெண்களின் பங்கேற்புக்கூடாக அல்லது நிகழ்ச்சிநிரலில் பால்நிலை சமத்துவம் தொடர்பான பிரச்சினைகளை முன்வைப்பதற்கூடாக உணர்வு பூர்வமான கலாசார விழுமியங்களை கையாள்வதற்கான ஒரு இடமாக இருந்து வரவில்லை என ஒரு சிலர் வாதிடுகின்றனர். ஆனால், பால்நிலை சமத்துவம் தொடர்பான கோரிக்கையை முன்வைப்பதற்காக மட்டுமே பெண்கள் பேச்சுவார்ததை மேசைக்கு வருகின்றார்கள் என்ற அனுமானம் பொய்யானதாகும்.

## இந்த இடையூறை வெற்றி கொள்வது எப்படி?

1. போர் எடுத்து வரும் பாதிப்புக்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாக இருந்து வருகின்றன என்ற விடயத்தை சுட்டிக் காட்டுவதன் மூலம் இந்த வாதங்களை மறுக்கவும். போர் வலயங்களில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது சமூகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகள் குறித்து – குறிப்பாக, ஆண்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் குறித்து – குரலெழுப்பி வருகின்றார்கள்.

2. சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அனைவருக்கும் பொதுவான நிர்ணயகரமான பிரச்சினைகளை எழுப்புகின்றார்கள் என்ற விடயத்தை குறிப்பிடவும் (உதாரணமாக, பால்நிலை கண்ணோட்டங்களுடன் கூடிய விதத்தில் வளங்களை பகிர்ந்து கொள்ளல், பொலிஸ் துறை சீர்த்திருத்தங்கள் மற்றும் பாதுகாப்புத் துறை சீர்த்திருத்தங்கள் போன்ற விடயங்கள்).

3. நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்க வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து அவர்களுக்கு தகவல்களை தெரிவிப்பதற்கும், அவர்களிடமிருந்து உள்ளீடுகளை பெற்றுக் கொள்வதற்கும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை சந்திக்கவும். பால்நிலை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பெண்களின் தேவைகள் குறித்து மட்டும் அவர்களுடன் பேச வேண்டாம்.

4. நிகழ்ச்சிநிரலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு தொடர்பாகவும் தமது மக்கள் பிரிவினரின் வேறுபட்ட அனுபவங்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் தேவைகள் என்பன தொடர்பாக தரப்பினர்களிடம் கேட்டு, அறிந்து கொள்ளவும் (காணி உரிமைகள், ஆயுதக் களைவு போன்றவை).

சமாதான பேச்சுவார்த்தை இடம்பெறும் மேசையில் எட்டப்படும் உடன்பாடுகள் பெண்கள், சிறுபான்மையினர் மற்றும் ஏனைய குழுக்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒட்டுமொத்த சமுதாயத்தினதும் எதிர்காலத்திற்கான ஒரு திட்டத்தை முன்வைக்கின்றன. பேச்சுவார்த்தை மேசையில் இக்குழுக்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்காவிட்டால், மேசையில் வைத்து தமது எதிர்காலம் மற்றவர்களால் தீர்மானிக்கப்படும் ஆபத்தை அவர்கள் எதிர்கொள்கின்றார்கள். ஆச்சே சமாதான பேச்சுவார்த்தைகளை அடுத்து ஒரு இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு எழுச்சியடைந்தது. அந்த அமைப்பு பெண்கள் உரிமைகளுக்கெதிரான மிகவும் பிற்போக்குவாத கருத்துக்களுடன் கூடிய ஒரு நிகழ்ச்சிநிரலை முன்வைத்தது. சமூகத்தின் ஒரு குழுவின் அல்லது ஒரு தரப்பினரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்களை கவனத்தில் கொண்டு பேசித் தீர்க்கப்படும் சமாதான ஒப்பந்தங்கள், மற்றொரு தரப்பினரின் - குறிப்பாக, அந்த தரப்பினர் குடித்தொகையின் அரைவாசியினராக அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருந்து வரும் சந்தர்ப்பத்தில் - இழப்புக்களின் மீது மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களாக இருந்து வர முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 2

## சிறந்த சமாதானத்துக்கு வழிகாட்டும் நான்கு துறைகள்: அனைவரையும் உள்ளடக்கிக் கொள்வதற்கான முனைப்பான படிமுறைகள்

### இந்தக் கருவியை எவ்வாறு, எப்பொழுது பயன்படுத்துவது:

ஒரு மத்தியஸ்த முயற்சியின் போது உத்தியோகபூர்வ செயன்முறை ஆரம்பிப்பதற்கு முன்னரும் கூட, நிகழ்ச்சிநிரல்கள் உருவாகி வரும் நிலையில் தொடக்கத்திலேயே அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் செயற்பாட்டை இலகுவாகவும், மிகவும் தாக்கமான விதத்திலும் மேற்கொள்ள முடியும். ஆனால், எந்தவொரு கட்டத்திலும் அது தாமதமானதாக இருந்து வர மாட்டாது.

செயன்முறையின் ஒவ்வொரு கட்டத்தின் போதும் ஒரே நேரத்தில் செயற்பட வேண்டிய ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட நான்கு ஆதரவுச் செயற்பாடுகள் இருந்து வருகின்றன:

- பல்வேறு பகுப்பாய்வுகளை அங்கீகரித்தல், பின்புலத்தை புரிந்து கொள்ளல், பல்வேறுபட்ட செயற்பாட்டாளர்களிலிருந்து வருவதனை ஏற்றுக் கொள்ளல் மற்றும் உள்ளூர் பங்கீடுபாட்டாளர்கள் நடத்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய சமாதான பேச்சுவார்த்தைகளின் தரப்புக்கள் மற்றும் நோக்கங்கள் போன்றவற்றை அங்கீகரித்தல்;

- முறைசார்ந்த, முறைசாராத பின்புலங்களில் அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் செயற்பாட்டுக்கு அரசியல் ஆதரவை வழங்குதல்;

- கணிசமான அளவிலான பிரச்சினைகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் பொருட்டு அவர்களுடைய பேச்சுவார்த்தை திறன்கள், ஆற்றல்கள் என்பவற்றை வலுப்படுத்தும் பொருட்டு தொழில்நுட்ப ஆதரவு மற்றும் நிபுணத்துவம் என்பவற்றை பெற்றுக் கொடுத்தல்;

- சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுக்கு உரிய நேரத்தில் பொது வசதிகள் மற்றும் நிதியுதவிகள் என்பவற்றை வழங்குதல்.

அனைவரையும் தாக்கமான விதத்தில் உள்ளடக்கிக் கொள்ளும் அணுகுமுறை சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவியின் கட்டமைக்கப்பட்ட சமாதான செயன்முறையின் ஒவ்வொரு கட்டத்தின் போதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய நான்கு செயற்பாட்டுத் துறைகளை எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக்கரு சார்ந்த மற்றும் பகுப்பாய்வு சார்ந்த பின்புலத்தை புரிந்து கொள்ளல், மோதலை பகுப்பாய்வு செய்தல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுடன் நடத்தப்படும் சமாதானப் பேச்சு வார்த்தைகளின் நோக்கத்தை பகுப்பாய்வு செய்தல்

அரசியல் ஆதரவு:
மத்தியஸ்த செயற்பாடுகள், முதன்மையான சந்திப்புக்கள், உச்சி மாநாடுகள் மற்றும் கலந்தாராய்வுகள் என்பவற்றில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை உள்ளடக்கிக் கொள்வதற்கென அழுத்தம் பிரயோகித்தல்

ஆயத்தம் /பேச்சுவார்த்தைக்கு முன்னர், சமாதான பேச்சு வார்த்தைகளின் போது மற்றும் அமுலாக்கலின் போது

தொழில்நுட்ப ஆதரவு:
சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் பாதுகாப்பு, ஆளுகை, இயற்கை வளங்கள் மற்றும் செயன்முறையில் காணப்படும் ஏனைய பிரச்சினைகள் என்பன தொடர்பாக பால்நிலை கூருணர்வை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு

பொது ஏற்பாடுகள் மற்றும் நிதி ஆதரவு:
பிரயாணம், பாதுகாப்பு மற்றும் விசாக்கள் என்பவற்றுடனும், உரிய நேரத்தில் வழங்கப்படும் நிதியளிப்புடனும் பெண்களின் பங்கேற்பினை இயலச் செய்தல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சர்வதேச சமூகம் பயன்படுத்தும் சமாதானம் என்ற பதத்திற்கான வரைவிலக்கணம் என்ன? சமாதானம் என்ற பதத்திற்கு சரியான முறையில் வரைவிலக்கணம் வழங்கப்படாவிட்டால் எவ்வாறு ஒரு சமாதான செயன்முறை இருந்து வர முடியும்?"
தனா பி- சமாதான செயற்பாட்டாளர்
(சிரியா)

## 1. மத்தியஸ்த செயற்பாட்டின் பின்புலத்தை புரிந்து கொள்ளல்

1. மோதல் மற்றும் சமாதானம் என்பவற்றை தூண்டும் காரணிகள்/ காரணங்கள் என்பன குறித்து கற்றல்.

2. மோதல் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய தரப்பினரின் மீது எவ்வாறு வேறுபட்ட விதத்தில் தாக்கங்களை எடுத்து வருகின்றது என்ற விடயத்தை கேட்டறிதல; ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் இதற்கு எவ்வாறு எதிர்வினையாற்றுகின்றார்கள் என்பதனையும், எதிர்காலம் தொடர்பான உள்ளூர் மக்களின் நோக்கினையும் தெரிந்து கொள்ளல்.

3. தற்போதைய அல்லது புதிய சிவில் சமூக சமாதான செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய விதத்தில் செயற்பாட்டாளர் குறித்த வரைபடம் ஒன்றை தயாரிக்கவும். இதற்கென உள்ளூர் சிவில் சமூகத்திடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது உங்கள் நிறுனத்தில் பணி புரியும் பால்நிலை/ அனைவரையும் உள்ளடக்கும் நிபுணரிடம் உதவியை கேட்டு பெற்றுக் கொள்ளவும்.

4. பெண்கள் பொது வாழ்க்கையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் அதிகாரத்தை பெற்றுக் கொள்வது எப்படி, செல்வாக்குச் செலுத்துவது எப்படி என்ற விடயத்தை கேட்டுத் தெரிந்து கொள்ளல்; அந்த நிலையில், அவர்கள் பின்புலம் குறித்த உணர் திறன் மிக்க விதத்தில் இதனை அணுகக் கூடிய வாய்ப்பு கிடைப்பதுடன், அது அவர்களை வலுவிழக்கச் செய்ய மாட்டாது.

5. பின்வருவனவற்றுக்கான வேண்டுகோளை விடுப்பதற்கென/ பணிகளை ஒப்படைப்பதற்கென சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை சந்தித்தல்: a) நிகழ்ச்சிநிரல் தலைப்புக்களின் பால்நிலை சார்ந்த அம்சங்களை ஏற்பாடு செய்தல், b) பெண்களின் பங்கேற்பினை பெற்றுக் கொள்வதற்கென கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகள் தொடர்பான ஒரு வரைபடத்தை தயாரித்தல், c) பாதுகாப்பு, மனிதநேயப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய முக்கியமான பிரச்சனைகள் என்பவற்றுக்கான தீர்வுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மத்தியஸ்த உத்தியில் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை ஒருங்கிணைத்தல்; அந்நிலையில் அவர்கள் முறைசார்ந்த வழித்தடம் I செயன்முறையிலிருந்து தனிமைப்படுத்தப்பட மாட்டார்கள்.

7. மோதலின் அனைத்து தரப்புக்களையும் சேர்ந்த பெண்கள், புறமொதுக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் சிவிலியன்கள் ஆகியோரை அணுகுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்; பரந்த அடிப்படையிலான கலந்தாலோசனைகளை நடத்துவதற்கென பல்தரப்பு மற்றும் சர்வதேச முயற்சிகளுக்கு ஆதரவளித்தல், தேவை ஏற்படின், பிரத்தியேகமாக பெண்களுக்கான ஒரு களத்தை வழங்குதல்.



## முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டியவை:

- பெண்களிடம் “பெண்களின் பிரச்சினைகள்” குறித்து மட்டும் பேச வேண்டாம் - அனைத்து பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களுடைய கண்ணோட்டங்களை பெற்றுக் கொள்ளவும். தொனிப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல்களில் பங்குபற்றுமாறும், உரை நிகழ்த்துமாறும் அவர்களுக்கு அழைப்பு விடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமாதான பேச்சுவார்த்தைகளிலும், கலந்தாலோசனைகளிலும் அல்லது தயார்படுத்துவதற்கான கூட்டங்களிலும் பங்கேற்கும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் மீது தாக்குதல் தொடுத்தல், அவர்களை துன்புறுத்துதல், சிறைப்படுத்துதல் அல்லது அவர்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்தல் என்பன மேற்கொள்ளப்படாது என்ற விதத்தில் அரசுகளிடமிருந்து அல்லது ஆயுதக் குழுக்களிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதங்களை பெற்றுக் கொள்வது முக்கியமானதாகும். ஆயுதக் குழுக்களுக்கு வழங்கப்படுவது போலவே அவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

"சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் மிகவும் ஆபத்தான ஒரு பணியை மேற்கொண்டுள்ளார்கள்."

\- தூதுவர் டொன் ஸ்டீன்பேர்க் World Learning அமைப்பின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் அங்கோலாவுக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *II.* பெண்களை உள்ளடக்கிக் கொள்ளும் விடயத்திற்கு அரசியல் ஆதரவை வழங்குதல்

1. மத்தியஸ்த செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களின் பணிப்பாணையில் ஐ நா பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325 ஐ அமுலாக்கும் விடயத்தை உள்ளடக்கவும். பெண்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் ஆகியோரின் பங்கேற்பு, தெரிவுக்கான ஒரு முக்கியமான அளவுகோலாக ஆக்கப்படுதல் வேண்டும்.



2. தகராறுகளை சமாதான மத்தியஸ்த செயற்பாட்டுக்கூடாக தீர்த்து வைத்தல் தொடர்பான UNGA தீர்மானம் மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1325 நிகழ்ச்சிநிரல் என்பவற்றை உங்கள் நிறுவனம் அர்ப்பணிப்புடன் செயற்படுத்தி வருகின்றது என்ற விடயத்தை தனிப்பட்ட முறையிலும், பகிரங்கமாகவும் எடுத்துக் காட்டவும்.

3. உங்கள் குழுவில் பால்நிலை சமத்துவம் மற்றும் நிபுணத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை உள்ளடக்கிக் கொள்ளவும் (பேச்சுவார்த்தை நடத்தும் குழுக்களில் / பேராளர் குழுக்களில் பெண்களுக்கு ஆகக் குறைந்தது 30% பங்கினை வழங்குதல்); சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களின் நிபுணத்துவத்தை பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தல்.

4. அனைத்து பங்கீடுபாட்டாளர்கள், மத்தியஸ்த செயற்பாட்டாளர்கள் ஆகியோருடன் பெண்களை உள்ளடக்கிக் கொள்வது தொடர்பான பன்முக மாதிரிகள் / முறைமைகள் என்பவற்றை பகிர்ந்து கொண்டு, அவை ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன என்ற விடயத்தை எடுத்து விளக்கவும். தனியொரு முறைமையில் மட்டும் தங்கியிருக்க வேண்டாம்.

5. சர்வதேச தயார்படுத்தும் கூட்டங்கள், உத்திகளை உருவாக்கும் அல்லது அமுல் செய்யும் கூட்டங்கள், உச்சி மாநாடு என்பவற்றில் பங்கேற்று, உரையாற்றுவதற்கென சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுக்கு அழைப்பு விடுக்கவும். இவற்றுக்கென தம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயார்படுத்திக் கொள்வதற்கென அப்பெண்களுக்கு பிந்திய தகவல்கள், ஆதரவு மற்றும் கால அவகாசம் என்பவற்றை பெற்றுக் கொடுக்கவும்.

6. சமாதான ஒப்பங்களில் கையொப்பமிடுபவர்களாக சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களும் உள்ளடக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கவும்: லைபீரியா, சோமாலியா, வட அயர்லாந்து ஆகிய நாடுகளின் முன்னுதாரணங்களை சுட்டிக் காட்டுங்கள்.



7. நிலைமாற்ற அமைப்புக்களின் அல்லது அமுலாக்கல் அமைப்புக்களின் குறிப்பு நியதிகளில் பால்நிலை கூருணர்வு என்ற விடயம் உள்ளடக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்; பெண்களை தாக்கமான விதத்தில் உள்ளடக்கிக் கொள்வதற்கென கோட்டா முறைகள் அல்லது ஏனைய வழிமுறைகள் என்பன இருந்து வருவதனை உறுதிப்படுத்தவும்.

8. சர்வதேச தூதுக் குழுக்கள், ராஜதந்திரிகளின் குழுக்கள் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுவர்கள் ஆகியோருடன் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் தொடர்ச்சியான அடிப்படையில் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு வசதிகளை செய்து கொடுக்கவும் / அல்லது அனுசரணை வழங்கவும். இது சமாதான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு முன்னரும், பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் போதும், அமுலாக்கல் கட்டங்களிலும் இடம்பெறுதல் வேண்டும்.

9. ஒப்பந்தங்களை அமுல் செய்வதற்கென தேசிய தொனிப்பொருள் சார்ந்த செயற் குழுக்களை ஸ்தாபித்தல்; பால்நிலை கூருணர்வினை கண்காணிப்பதற்கும், உறுதிப்படுத்திக் கொள்வதற்குமென 1325 குழுவொன்றை உள்ளடக்கவும்; நேபாளத்தில் 2005 இல் மேற்கொண்டதை போல அக்குழுக்களின் உறுப்பினர்களை ஏனைய தொனிபொருள் சார்ந்த குழுக்களிலும் உள்ளடக்கவும்.

10. சமாதானத்திற்கு சார்பான பெண்கள் குழுக்களை நிலையாக வைத்துக கொள்வதன் மூலமும், அவற்றுக்கு நிதியளிப்புக்களை வழங்குவதன் மூலமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்குலைப்பவர்கள் எடுத்து வரக் கூடிய ஆபத்துக்களை குறைத்துக் கொள்ளல். அமுலாக்கல் விடயத்தில் முழுமையாக கவனம் செலுத்துதல், ஓர் ஒப்பந்தம் கைசாத்திடப்பட்ட பின்னர் அது தொடர்பாக இடம்பெறக் கூடிய பாதகமான விடயங்கள் தொடர்பாக எச்சரிக்கை விடுத்தல்.

**முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள்:**

- வழித்தடம் *I* அல்லது வழித்தடம் *II* பேச்சுவார்த்தைகளுக்கு சமயத் தலைவர்கள் அல்லது பழங்குடித் தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பதாக இருந்தால், நம்பகமான, மரியாதைக்குரிய மற்றும் மனித உரிமைகள் மற்றும் சமத்துவம் தொடர்பான விழுமியங்களை மேம்படுத்தக் கூடிய அத்தகைய தலைவர்கள் யார் என்பதனை கண்டறியும் பொருட்டு சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுடன் கலந்தாலோசனைகளை மேற்கொள்ளவும்.

- முறைசார்ந்த பேச்சுவார்த்தைகளில் பெண்களின் பங்கேற்பை விரிவாக்குவதற்கான வாய்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுக்கப்பட்டதாக இருந்து வந்தாலும் கூட, செயல்முறை நெடுகிலும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுடன் முறையான ஒழுங்கில், தொடர்ச்சியாக தொடர்புகளை பராமரித்து வருதல்.

- அநேகமாக தோல்விக்கான வாய்ப்புக்களை கொண்டிருக்கும் பெண்களை புறமொதுக்கும் செயன்முறைகளின் விளைவாக ஏற்படக் கூடிய மனிதநேய, பாதுகாப்பு மற்றும் அரசியல் இழப்புக்களை தவிர்ப்பதற்கென பெண்களை உள்ளடக்கிக் கொள்ளும் விடயத்தை அரசியல் மற்றும் நிதிசார் ஆதரவுக்கான ஒரு பொதுவான நிபந்தனையாக மாற்றுதல்.

- ஐ நா பாதுகாப்புச் சபையை சேர்ந்தவர்கள் நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொள்ளும் பொழுது சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் போன்ற தரப்பினரைச் சந்தித்து, பேச்சுவார்த்தைகளை நடத்துதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களை உள்ளடக்கிக் கொள்வதற்கான கோரிக்கையை முன்வைப்பதற்கு உங்கள் செல்வாக்கை பயன்படுத்தவும். ஆப்கானிஸ்தானுக்கான முன்னாள் நோர்வே தூதுவர் பின்வருமாறு கூறியிருந்தார்: "நோர்வே, ஆப்கானிஸ்தான் மக்களை சமாதான பேச்சுவார்த்தை மேசையில் ஒன்றிணைக்க வேண்டும் என்று விரும்பினால் அதற்கான முன் நிபந்தனை அங்கு பெண்களும் இடம்பெற வேண்டும்" என்பதாகும். இந்த அரசியல் ஆதரவு காரணமாக பேராளர் குழுவில் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெட்டி 4: சிவில் சமூக பிரதிநிதிகளை தெரிவு செய்வது தொடர்பான சிறந்த நடைமுறைகள

சமாதான செயன்முறைகளில் உள்ளடக்கிக் கொள்வதற்கென சிவில் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளையும், பெண்கள் பிரதிநிதிகளையும் இனங்காணும் விடயம், அவ்விதம் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிக்கொள்வது தொடர்பான ஒரு முக்கியமான இடையூறாக இருந்து வருகின்றது என சர்வதேச செயற்பாட்டாளர்கள் அடிக்கடி கூறி வருகின்றனர். இடையூறு 3 இல் எடுத்துக் காட்டப்பட்டதை போல 'அவர்கள் யார்' , 'நாங்கள் தாக்கமான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவது எப்படி?, மற்றும் 'நாங்கள் ஒருவருக்கு அழைப்பு விடுப்பதாக இருந்தால், எல்லோருக்கும் அழைப்பு விடுக்க வேண்டியிருக்கும்' போன்ற கேள்விகள் எழுப்பப்படுவதன் விளைவாக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் விடயத்தில் முனைப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வரும் ஒட்டுமொத்த சிவில் சமூகமும் (குறிப்பாக பெண்கள் குழுக்களும்) இச் செயன் முறைகளிலிருந்து புறமொதுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌத்தமாலா மற்றும் வட அயர்லாந்து ஆகிய நாடுகளில் மேற்கொண்டதை போல, உள்ளூர் சிவில் சமூகக் குழுக்கள் கூட்டங்களை நடத்தி, தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து கொள்ளும் முறை மிகச் சிறந்த முறையாக இருந்து வரும். பகிரங்க பங்கேற்பு மற்றும் பதவிகள் தொடர்பாக விளம்பரங்களை மேற்கொள்ளல் என்பனவும் சாத்தியமான ஏனைய வழிமுறைகளாகும். ஆனால், வேறு நிகழ்வுகளின் போது இந்த நிலைகள் சாத்தியமற்றவையாக இருந்து வர முடியும்.

இந்த பெட்டி "சிவில் சமூகக் குழுக்களை தெரிவு செய்வதற்கான மாதிரி அளவுகோல்" என்ற தலைப்பிலான பெட்டி 3 க்கு மேலும் வலுவூட்டுவதுடன், உலகளாவிய ரீதியில் செயற்பட்டு வரும் சமாதான செயற்பாட்டாளர்களின் கருத்துக்களின் பிரகாரம், பங்கேற்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோரை தெரிவு செய்வது தொடர்பான மிகச் சிறந்த நடைமுறைகளை முன்வைக்கின்றது.

1. உள்ளடக்கப்படும் நபர்களின் சட்டபூர்வத் தன்மை / நம்பகத்தன்மை என்பவற்றை சரிபார்த்துக் கொள்வதற்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கள மதிப்பீடுகள் மற்றும் நம்பகமான உள்ளூர் மற்றும் சர்வதேச தொடர்புகள் என்பவற்றை பயன்படுத்துவதன் மூலம் செயற்பாட்டாளர்களின் வரைபடத்தை தயாரித்தல்.

2. உள்ளூர் செயற்பாட்டாளர்களுடன் (பார்க்கவும் பெட்டி 3) கலந்தாலோசித்து, தெரிவு அளவுகோல் ஒன்றை அபிவிருத்தி செய்தல்; மேலிருந்து கீழ்நோக்கியிருக்கும் அணுகுமுறை சட்டபூர்வத் தன்மையற்றதாக இருந்து வர முடியும். அந்த அளவுகோல் திட்டவட்டமானதாகவும், சாதித்துக் கொள்ளக் கூடியதாகவும் இருந்து வருதல் வேண்டும். பால்நிலை அம்சம் கவனத்தில் எடுக்கப்படுவதனை ஒரு முன்னுரிமையாக உள்ளடக்கவும்.

3. சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களை அணுகும் பொருட்டு பாரம்பரியமற்ற குழுக்களை – குறிப்பாக பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பான உலகளாவிய பெண்கள் வலையமைப்புக்களை அணுகவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பின் வருவனவற்றின் மூலம் தீங்கிழைப்பதனை தவிர்த்துக் கொள்ளவும்: a) தொடர்ந்தும் ஒரே விதமான முக்கியஸ்தர்களுக்கு அழைப்பு விடுத்தல்; b) ஆங்கிலம் பேசுபர்களுக்கு மட்டும் வரையறுத்தல்; c) பூகோள ரீதியான/ இனத்துவ ரீதியான சமநிலையை உறுதிப்படுத்தாதிருத்தல்; தெரிவு செய்வதற்கான அளவுகோல் குறித்து கலந்தாலோசனை செய்யாமை, அதனை விளக்கிக் கூறத் தவறுதல்.

5. தனிநபர்கள் கன்றி நிறுவனங்களுக்கு அழைப்பிதழ்களை அனுப்பி வைக்கவும். தற்போதைய பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு, தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறு/ தேர்ந்தெடுக்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்ளவும்.

6. சாத்தியமானால் சமகால தேசிய கலந்தாராய்வுகளை நடத்தவும்; அவற்றுக்கூடாக பிரதிநிதிகளை இனங்கண்டு கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கால அவகாசம் குறுகியதாக இருந்து வந்த போதிலும், மக்களுக்கு தகவல்களை வழங்கும் பொருட்டு தொடர்பு மற்றும் பின்னூட்டல் வழிமுறைகளை ஸ்தாபித்துக் கொள்ளவும். ஒவ்வொரு நிகழ்வுக்கும் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்படாதது ஏன் என்பதனை எடுத்து விளக்கவும்.

8. சர்வதேச கூட்டங்களுக்கு உள்ளூர் சிவில் சமூகக் குழுக்களை அவர்களுடைய நிபுணத்துவத்தின் அடிப்படையில் அழைக்கவும் (உதாரணமாக மனித நேய உச்சி மாநாடுகளுக்கு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களை அழைக்க முடியும்.)

9. சிவில் சமூக அமைப்புக்கள் ஸ்தாபித்துக கொண்டிருக்கும் தெரிவு செயன் முறைகளுக்கு மதிப்பளிக்கவும்; அவர்களுடைய தீர்மானத்தை மீறும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III. தொழில்நுட்ப உதவியை வழங்கவும்

1. தொழில்நுட்ப ஆலோசகர்கள் (உதாரணமாக ஐ நா தயார் நிலை குழுவினர் மற்றும்) மத்தியஸ்த செயற்பாட்டாளர்கள் ஆகியோர் தமது நிபுணத்துவத் துறையில் பால்நிலை சார்ந்த அறிவினை கொண்டிருப்பதனை பின்வருவனவற்றின் மூலம் உறுதிப்படுத்தவும்: a) அவர்களின் தெரிவின் போது அது ஒரு அளவுகோலாக இருந்து வர வேண்டும்; மேலும் அவர்களுடைய பணிப்பாணையிலும் அந்த விடயம் உள்ளடக்கப்படுதல் வேண்டும்; b) முறையான பயிற்சிகளை வழங்குதல்; c) பால்நிலை/ அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் விடயம் தொடர்பான ஆலோசகர்களுடன் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டுமென எதிர்பார்த்தல்.

2. சமாதான பேச்சுவார்த்தைகளில் தோன்றக் கூடிய முக்கியமான தலைப்புக்கள் தொடர்பாக பால்நிலை அடிப்படையில் விளக்கமளிக்கும் பத்திரங்களை தயாரித்தல். இந்தப் பத்திரங்களை தயாரிக்கும் பொழுது, சண்டையில் ஈடுபட்டிருக்கும் தரப்பினர் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் ஆகியோருடன் கலந்தாலோசனைகளை நடத்துதல்

3. சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுடன் செயற்படும் விடயத்தில் ஏற்கனவே நன்கு அனுபவத்தை பெற்றுக் கொண்டிருக்கும் தூதுவர்களை கண்டறிந்து, நியமனம் செய்யவும்; முக்கியமான துறைகளில் பால்நிலை தொடர்பான கண்ணோட்டத்தை உள்ளடக்கவும்.

4. தூதுவருக்கு நேரடியாக அறிக்கையிடும் மூத்த பால்நிலை ஆலோசகர் / அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளும் விடயம் தொடர்பான ஆலோசகர் ஒருவரை நியமனம் செய்தல். அவர் அரசியல் குழுவின் ஓர் உறுப்பினராக இருந்து வருதல் வேண்டும்.

5. சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு நடுநிலைத் தன்மையுடன் கூடிய பால்நிலை மற்றும் உள்ளடக்கல் ஆலோசகர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டுமென பரிந்துரை செய்தல். பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அனைத்து தரப்பினர்களுக்கும் தகவல்களை வழங்குவதற்கு அவர் பொறுப்பாக இருந்து வருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பாக சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களின் ஆற்றலை அபிவிருத்தி செய்தல் (உதாரணமாக ஆளுகை கட்டமைப்புக்கள், பகைமைச் செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருதல், மத்தியஸ்தம், பேச்சுவார்த்தை திறன்கள் என்பவற்றில் இந்தப் பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும்). அவர்கள் சமாதான ஒப்பந்தங்களை அமுல் செய்பவர்களாகவும், அவற்றை கண்காணிப்பவர்களாகவும் இருந்து வரும் பொருட்டு, இந்தப் பயிற்சி அவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படுதல் வேண்டும்.

7. சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் ஓரணியில் அணி திரள வேண்டுமென அவர்களை பலவந்தப்படுத்தாமல், அத்தகைய பெண்களுக்கு மத்தியில் ஒரு கூட்டணியை கட்டியெழுப்புவதற்கு அனுசரணை வழங்குதல். இந்த ஆதரவை வழங்குவதற்கென UN Women அமைப்பு மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்புக்கள் என்பவற்றுடன் செயற்படல் வேண்டும்.

முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள்:

- சமாதான செயன்முறை நெடுகிலும் முக்கியமான துறைகளில் அவர்கள் ஐ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325 நிகழ்ச்சிநிரலை எவ்வாறு அமுல் செய்து வருகின்றார்கள் என்ற விடயத்தின் அடிப்படையில் மத்தியஸ்த செயற்பாட்டில் ஈடுபட்டு வருபவர்கள் மதிப்பிடப்படுதல் வேண்டும்.

- மத்தியஸ்த குழுவுக்கு (பொது மக்களை தொடர்பு கொள்ளக் கூடிய தகவல்களை வைத்திருக்கும்) தொடர்பு உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்யும் விடயத்தை கவனத்தில் எடுத்தல். அவர் சிவில் சமூகக் குழுக்களுக்கும், சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுக்கும் தகவல்களை வழங்குவதற்கும், அவர்களுடைய கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கும் பொறுப்பாக இருந்து வருவார். அவருக்கூடாக அக்குழுக்கள் மத்தியஸ்த செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் அல்லது தூதுவர் ஆகியோரை நேரடியாக அணுகக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.

மாதிரிகளை உள்ளடக்கிய தலைமைத்துவம் மற்றும் கூட்டு ஆண் /பெண் இணை மத்தியஸ்தர்கள் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும். கிரேஸா மெச்சல் மற்றும் கொபி அனான் ஆகியோரின் தலைமையில் 2008 இல் இடம்பெற்ற கென்யா மத்தியஸ்த செயன்முறை இதற்கான ஒரு முக்கியமான முன்னுதாரணத்தை வழங்குகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. பொது ஏற்பாடுகள் மற்றும் நிதியுதவி என்பவற்றை வழங்குதல்

1. முனைப்பான விதத்தில் சமாதானத்தை உருவாக்கும் பொருட்டு உள்ளூர் அமைப்புக்களுக்கு உரிய காலத்தில் நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய நிதியுதவிகளை வழங்கவும். அவசியம் ஏற்படின், நிதிகளை பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் குறித்து அனுபவத்தை பெற்றுக் கொண்டிருக்கும் நம்பகமான, சர்வதேச அரசு சாரா அமைப்புக்களுக்கூடாக பகிர்ந்தளிக்க முடியும்.

2. சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுக்கு ஆதரவளிப்பதற்கென விசா விண்ணப்பங்கள் தொடர்பான நடைமுறைகள், ஏனைய ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பான விடயங்களை ஒருங்கிணைத்து, துரிதப்படுத்துதல்.

பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளை இனங்கண்டு, கவனத்தில் எடுப்பதற்கென பாதிக்கப்பட்டிருக்கும் சிவில் சமூக உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை நடத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சர்வதேச நிகழ்வுகளில் பங்கேற்கும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்கள் கூட்டங்கள் நடைபெறும் இடங்களை அணுகுவதற்கு உரிய அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்தவும்.

2. சமாதான செயன்முறைகளில் பங்கேற்பதற்கு செல்வதற்கு மட்டுமன்றி, சொந்த நாட்டில் அவர்கள் விட்டுச் செல்லும் தமது குடும்பத்தினரை பராமரிக்கும் பொருட்டும் சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல்.

3. அனைத்து கூட்டங்களிலும் உரை பெயர்ப்பு வசதிகளை வழங்குதல்; சம்பந்தப்பட்ட பிரசுரங்களின் மொழிபெயர்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல்; தொழில்நுட்ப ரீதியில் தயார் படுத்தும் ஆவணங்களும் உள்ளூர் மொழிகளில் மொழிபெயர்க்கப்படுதல் வேண்டும்.

4. சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களின் வலையமைப்புக்களின் நிலைத்து நிற்கக் கூடிய ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கென நீண்ட கால ரீதியில் வளங்களை பகிர்ந்தளித்தல் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக, ஒவ்வொரு துறையிலும் அவர்கள் கொண்டிருக்கும் ஆழமான தொழில்நுட்ப அறிவு மற்றும் உள்ளூர் நிபுணத்துவம் என்பன நிர்ணயகரமாக இருந்து வரும் அமுலாக்கல் கட்டங்களின் போது இந்த உதவி வழங்கப்படுதல் வேண்டும்.

5. அனைத்து கூட்டங்களிலும் உரை பெயர்ப்பு வசதிகளை வழங்குதல்; சம்பந்தப்பட்ட பிரசுரங்களின் மொழிபெயர்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல்; தொழில்நுட்ப ரீதியில் தயார் படுத்தும் ஆவணங்களும் உள்ளூர் மொழிகளில் மொழிபெயர்க்கப்படுதல் வேண்டும்.

6. சமாதானத்தை கட்டியெழுப்பும் பெண்களின் வலையமைப்புக்களின் நிலைத்து நிற்கக் கூடிய ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கென நீண்ட கால ரீதியில் வளங்களை பகிர்ந்தளித்தல் - குறிப்பாக, ஒவ்வொரு துறையிலும் அவர்கள் கொண்டிருக்கும் ஆழமான தொழில்நுட்ப அறிவு மற்றும் உள்ளூர் நிபுணத்துவம் என்பன நிர்ணயகரமாக இருந்து வரும் அமுலாக்கல் கட்டங்களின் போது இந்த உதவி வழங்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை:
# மாறி வரும் நடைமுறைகளும் பரிமாணங்களும்

துப்பாக்கிச் சத்தங்கள் மௌனித்து, குண்டு வெடிப்புக்கள் நின்று போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஒரு உடன்பாடு எட்டப்பட்ட பின்னர், உண்மையான சமாதான கலாசாரம் ஒன்றை வேரூன்றச் செய்வது ஒரு கடினமான காரியமாக இருந்து வரும்; அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான ஒரேயொரு வழிமுறையாக வன்முறையே இருந்து வருகின்றது என நம்பும் ஒரு சிறு குழுவினரின் கைகளில் இந்தப் பொறுப்பு விடப்பட்டால் போர்களும், அவற்றுக்கான மூலகாரணங்களும் தொடர்ந்து நிலைத்திருக்க முடியும். அந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வன்முறையுடன் கூடிய அந்தச் சிறு தொகையினரின் பங்கேற்பு தேவைப்படும் அதே வேளையில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மௌனமாக ஆனால், அதே வேளையில், முனைப்பான ஒரு பெரும்பான்மையினராக இருந்து வரும் மக்கள் குழுவினரை நாங்கள் உதாசீனம் செய்ய முடியாது.

சிரியா, ஆப்கானிஸ்தான், சூடான் மற்றும் பர்மா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மிகப் பயங்கரமான மிகச் சிக்கலான போர் நிலைமைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலும் கூட, அந்நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் தமது சொந்த வாழ்க்கையிலும், தமது குடும்பங்களிலும் சமாதானத்தையும், சகஜ நிலைமையையும் தொடர்ந்து பராமரித்து வந்தனர். இந்த ஒவ்வொரு பின்புலத்திலும் ஒரு சிறு தொகையினரான சிவிலியன்கள் தமது சமூகத்திலும், தமது நாட்டிலும் சமாதானத்திற்காக குரலெழுப்புவதற்காகவும், செயற்படுவதற்காகவும் துணிச்சலையும், ஆற்றலையும் பெற்றுக் கொண்டிருந்தார்கள். தமது விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகள் என்பவற்றின் துணையுடன் அவர்கள் அவ்விதம் குரலெழுப்பினார்கள். அவர்களுடைய கருத்துக்களும், குரல்களும் பலம் குன்றியவையாக இருந்து வர முடியும்; ஆனால், அவர்களுடைய துணிச்சல், வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அவர்களுடைய அர்ப்பணிப்புணர்வு மற்றும் சமுதாயம் தொடர்பான அவர்களுடைய தூர நோக்கு என்பன சமூக நீதி, சமத்துவம் என்பவற்றில் வேரூன்றியுள்ளன. அவர்கள் இப்பின்புலத்தில் நிர்ணயகரமான செயற்பாட்டாளர்களாக இருந்து வருகின்றனர். எனவே, சர்வதேச சமூகம் அவர்களுக்கு அங்கீகாரமளிக்க வேண்டியிருப்பதுடன், எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கான, உரிமையையும் அவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான பேச்சுவார்த்தைகள் என்பன பாதுகாப்பு மற்றும் அரசியல் செயன்முறைகள் குறித்து கவனத்தில் எடுக்கும் ஒரு விடயமாக இருந்து வருகின்றது என்ற குறுகிய மனபான்மையில் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும். சமாதான பேச்சுவார்த்தைகள் சமுதாய செயன்முறைகளாகவும் இருந்து வருகின்றன என்ற விடயத்தை அங்கீகரித்தல் வேண்டும். சமாதான பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் மேசை பிரிவினை மற்றும் அதிகாரப் பகிர்வு என்பவற்றுக்கான இடமாக இருந்து வருவதற்கு பதிலாக, போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான பொறுப்பினை பகிர்ந்து கொள்வதற்கான ஒரு இடமாக மாற்றமடைதல் வேண்டும்.

குறிப்பிட்ட தரப்புக்களை மட்டுமே உள்ளடக்கிய விதத்தில் முன்னெடுக்கப்படும் சமாதான செயன்முறைகள் இன்றைய போர்களை முடிவுக்குக் கொண்டு வந்து, நிலைத்து நிற்கக் கூடிய சமாதானத்தை எடுத்து வருமென கருதுவது ஒரு இலட்சியம் மட்டுமே ஆகும். சிவில் சமூகத்தைச் சேர்ந்த சமாதானத்தை கட்டியெழுப்பும் நபர்களை - ஆண்களையும், பெண்களையும் - உள்ளடக்கிக் கொள்வதற்கான தேவையின் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது. சமகால மோதல்களை தாக்கமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில் தடுப்பதற்கும், தீர்த்து வைப்பதற்கும், நிலைமாற்றம் செய்வதற்கும் இத்தரப்புக்களை உள்ளடக்க வேண்டியிருக்கின்றது. சமாதானத்திற்கான ஒரு சிறந்த கருவி என்ற இந்த பிரசுரம் அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளல் என்ற விடயத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு தேவையான நடைமுறை வழிகாட்டுதல்களையும், முனைப்பு மிக்க படிமுறைகளையும் வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 1

## பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஐ நா பாதுகாப்புச் சபை தீர்மானங்கள்

| தீர்மானம் / வருடம் | கவனம் செலுத்தும் விடயம |
|---|---|
| 1325/2000 | போர் தொடர்பான பெண்களின் அனுபவங்கள் மற்றும் சமாதானம், பாதுகாப்பு என்பவற்றை பராமரித்து வருதல் என்பவற்றுக்கிடையில் ஓர் இணைப்பு இருந்து வருகின்றது என்ற விடயத்தை இது அங்கீகரிக்கின்றது. மோதல் தீர்வு மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பவற்றில் பெண்களின் தலைமைத்துவம் மற்றும் சமமான பங்கேற்பு என்பன இருந்து வருதல் வேண்டுமென கேட்டுக் கொள்கின்றது; சமாதான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு, பால் நிலை பெரும்போக்குப்படுத்தப்படல் வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1820/2008 மோதலுடன் சம்பந்தப்பட்ட பாலியல் வன்முறை ஒரு போர் உத்தியாக இருந்து வருகின்றது என்ற விடயத்துக்கு அங்கீகாரம் வழங்கிய முதலாவது தீர்மானம்; மோதல் தடுப்பு மற்றும் அதனை தீர்த்து வைத்தல் என்பன தொடர்பாக முடிவுகளை மேற்கொள்ளும் விடயத்தில் பெண்களின் வகிபாத்திரத்தை அதிகரிக்க வேண்டிய தேவையை இத்தீர்மானம் வலியுறுத்துகின்றது.

1888/2009 தீர்மானம் 1820 ஐ அமுல் செய்வதற்கான கருவிகளை இது மேம்படுத்துகின்றது; போரில் இடம்பெறும் பாலியல் வன்முறை சம்பவங்களை கவனத்தில் எடுப்பதற்கு விசேட பிரதிநிதி ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும் என ஐ நா செயலாளர் நாயகத்திடம் இது கேட்டுக் கொள்கின்றது; பெண் மத்தியஸ்தர்கள் குறைவாக இருந்து வரும் விடயம் தொடர்பாக கவலை தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1889/2009 | சமாதான செயன்முறைகளில் பெண்களின் பங்கேற்பு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டுமென்றும், போருக்குப் பிற்பட்ட காலப் பிரிவின் போதும், குறிகாட்டிகளை அபிவிருத்தி செய்யும் போதும், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் என்பவற்றின் போதும் இது வலுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றது. தீர்மானம் 1325 இன் அமுலாக்கலின் முன்னேற்றம் தொடர்பாக அறிக்கையிடலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| 1960/2010 | மோதலின் போது இடம்பெறும் பாலியல் வன்முறைக்கு பொறுப்புக் கூற வேண்டிய முறைமையொன்றை இத்தீர்மானம் முன்வைக்கின்றது; முறைசார்ந்த சமாதான செயன்முறைகளில் பெண்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கான முயற்சிகளை ஊக்குவிக்கின்றது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2106/2013 பாலியல் வன்முறையை கவனத்தில் எடுப்பதற்கான செயற்பாட்டு வழிகாட்டுதலை வழங்குவதுடன், பெண்கள் பாதுகாப்பு ஆலோசகர்களாக சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றது.

2122/2013 சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அனைத்து தரப்பினர்களும் தீர்மானங்களை எடுக்கும் விடயத்தில் பெண்களின் சமத்துவமான மற்றும் முழுமையான பங்கேற்புக்கு அனுசரணை வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றது; மோதல் வலயங்களில் வாழ்ந்து வரும் பெண்களுக்கு அதிகரித்த அளவில் வளங்களை பெற்றுக் கொடுப்பதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தும் செயன்முறையில் பெண்களின் பங்கேற்பினை அதிகரிப்பதனை இது நோக்கமாக கொண்டுள்ளது; பெண்கள் சிவில் சமூக அமைப்புக்களின் நிர்ணயகரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்புக்களை அங்கீகரிக்கின்றது.

2242/2015 இத்தீர்மானம் 15 ஆவது ஆண்டு நிறைவை குறிப்பதுடன், 1325 தீர்மானம் தொடர்பான அதன் அர்ப்பணிப்பை மீளவும் உறுதிப் படுத்துகின்றது; தீவிரவாத வன்முறையை எதிர்கொள்வதில் பெண்களின் வகி பாத்திரத்தை எடுத்துக் காட்டுவதுடன், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் ஆகியோரின் மனித உரிமைகள் மீது பயங்கரவாதம் எடுத்து வரும் வித்தியாசமான தாக்கத்தையும் கவனத்தில் எடுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்துக்கான ஒரு சிறந்த கருவி – விமர்சனக் கருத்துக்கள்

"இக்கருவி பெருமளவுக்கு பொருத்தப்பாட்டினைக் கொண்டுள்ளது. இது எமது நீண்ட காலத் தேவை ஒன்றைப் பூர்த்தி செய்கின்றது."

- சிலா எல்வேர்த்தி, சமாதானச் செயற்பாட்டாளர் மற்றும் ஒக்ஸ்போர்ட் ஆராய்ச்சிக் குழுவின் ஸ்தாபகர்

"இது மிகவும் சுவாரஷ்யமான ஒரு அறிக்கையாகும்..... அநேகமாக இதுவரையில் எழுதப்பட்ட மிகச் சிறந்த அறிக்கையாக இது இருந்து வருகின்றது."

- தூதுவர் கரே. ஆஸ், ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான நோர்வே தூதுவர்

"பெருமளவிலான நடைமுறை ஆராய்ச்சி மற்றும் ஞானம் என்பவற்றிலிருந்து பயனடைந்திருக்கும் ஒரு தலைசிறந்த ஆக்கம்".

- யூசுப் மஹ்மூத், சர்வதேச சமாதான நிறுவனத்தின் மூத்த ஆலோகசர்

"சமாதானத்துக்கான ஒரு சிறந்த கருவி தலைசிறந்த ஒரு ஆக்கமாகும்.... அது தகவல்களின் பொக்கிஷமாக இருந்து வருகின்றது. செயற்பாட்டாளர்கள் இலகுவில் பெற்று, பயன்படுத்திக் கொள்ளக் கூடிய ஒரு வழிகாட்டியாகவும் அது உள்ளது.... பரவலான சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட இந்த அறிக்கை, உண்மையிலேயே இதுவரையில் இத்துறை தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள் அனைத்துமடங்கிய ஒரு வழிகாட்டியாக இருந்து வருகின்றது."

- தூதுவர் டொன் ஸ்டீன்பேர்க், World Leaning அமைப்பின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி, ஐக்கிய அமெரிக்காவுக்கான முன்னாள் அங்கோலா நாட்டின் தூதுவர்

## சமாதானத்துக்கான ஒரு சிறந்த கருவி எமக்குத் தேவைப்படுவது ஏன்?

"சமாதானச் செயன்முறையிலிருந்து சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண்கள் ஆகியோரை புறமொதுக்கும் அபாயம் நிலவி வந்தால், ஒரு சமாதானச் செயன்முறை இருந்து வர முடியாது."

- செனட்டர் முபீனா ஜாபர், கனேடிய செனட் உறுப்பினர் மற்றும் சூடானுக்கான முன்னாள் கனேடியத் தூதுவர்

"நாங்கள் எவ்வாறு சமாதானத்தை உருவாக்குகின்றோம் என்ற விடயம் குறித்து கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள், சமாதானத்தை சாத்தியமக்குவதற்குத் தேவையான பேச்சுவார்த்தைகளை அதே நிலையில் ஒத்தவையாக இருந்து வரவில்லை"

- ரோஸா எமிலியா சலமன்கா CIASE அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், கொலம்பியா.

ICAN சர்வதேச சிவில் சமூக செயல் வலையமைப்பு
பெண்கள் உரிமைகள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு

1779 Massachusetts Ave, NW Suite 710
Washington DC 20036 USA
www.icanpeacework.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org